Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 150 குரோதி வருடம், தை மாதம் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (17.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 16, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

## உஷ்



வாகனங்களில் காணப்படும் மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றும் நடவடிக்கையை இடைநிறுத்த அரசாங்க மேல்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பல இடங்களில் இடம்பெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி படுதோல்வியடைந்துள்ளதால் ஆட்சி மீது மக்கள் அதிருப்தியடைய ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கருதியே மேற்படி திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

## கமெண்ட் கந்தர்...



போற போக்கைப் பார்த்தால் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தை சீனா தான் செய்யும்போல...

# மன்னாரில் பட்டப்பகலில் அகோரம்

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி!

## சாட்சியளிக்க வந்தவர்களை இலக்குவைத்து நீதிமன்ற வளாகத்தில் மனித வேட்டை



*ஜோசப் நயன்*

மன்னார் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர். வழக்கொன்றுக்காக நீதிமன்றத்துக்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

» 02 பக்கம்

# அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு

## சீனா 3.7 பில்லியன் டொலர் முதலீடு



» 02பக்கம்

# ‘வளமான நாடு - அழகான வாழ்க்கை’

## திட்டத்துக்கு சீனா ஆதரவளிக்கும்

### ஜனாதிபதி அநுரவிடம் சீனப் பிரதமர் சியாங் உறுதி



‘வளமான நாடு - அழகான வாழ்க்கை’ உருவாக்குவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக சீனப் பிரதமர் லீ சியாங் தெரிவித்தார்.

» 02 பக்கம்

# சந்தோஷ் ஜா - சஜித் விசேட சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது. பொருளாதார, சமூக, மற்றும் அரசியல்...

» 02 பக்கம்

# நாமல் ராஜபக்ஷவுடன் இந்தியத் தூதுவர் பேச்சு



இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சித் திட்டங்கள் மற்றும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள வேறு துறைகளுக்கிடையிலான பன்முகத்தன்மைக்கு தொடர்ந்தும் முக்கியத்துவம் வழங்க இந்தியா எதிர்பார்த்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர்...

» 02 பக்கம்

# வர்த்தகர்களுக்கு நிவாரணம்

## அரசாங்கத்தின் விசேட அறிவிப்பு

මුදල් අමාත්‍යාංශය
நிதிஅமைச்சு
MINISTRY OF FINANCE



கடன் மீள் செலுத்தும் செயற்பாடுகளில் சிரமங்களுக்குள்ளாகியுள்ள சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கத்தினால் நிவாரணப் பொதியொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிவாரணப் பொதி, இலங்கை மத்திய வங்கி, ஸ்ரீ லங்கா வங்கி சங்கம், சிறிய மற்றும் நடுத்தர மட்ட வர்த்தக பிரிவைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அரச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் வங்கி துறையின் ஸ்திரப்படுத்துவதை உறுதிப்படுத்தி பாதிப்புக்குள்ளான சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக செயற்பாடுகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நீண்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அனுமதிப்பெற்ற வங்கியொன்றில் கடன் வசதி பெற்றுக்கொண்டு 2019.04.01 திகதி அல்லது அதன் பின்னர் மூன்று கட்டங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு அவசியமான ஆவணங்களுடன், 2025.03.31 திகதி அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட வங்கி பிரிவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அந்த சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர் உத்தேசிக்கப்பட்டுள்ள நிவாரணப்பொதிக்குள் பிரவேசிப்பதற்கான தகுதியுடையவராக கருத்தப்படுவார் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

# தபால்துறை சம்பள அதிகரிப்பு

## தொழிற்சங்கம் போர்க்கொடி

தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு சாதகமான தீர்வொன்றை அரசாங்கம் முன்வைக்காவிட்டால், இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படும் பயணத்தை முறித்துக்கொள்ளும் நிலைமை ஏற்படலாம் என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தினர் அவர்களுக்கு ஏற்றாற்போன்று செயற்படுகிறார்கள் என்றால் அல்லது முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களின் கடந்த காலத்தை மறந்து புதிய பாதையில் செல்கிறார்கள் என்றால் கோட்டாபய ராஜபக்ஷவின் யுகம் மீண்டும் இந்த நாட்டில் தோற்றம்பெறுவதற்கு அதிக காலம்...

» 02 பக்கம்

# அதானி மின்திட்டம்: மே 23இல் விசாரணை

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானம்

» 02 பக்கம்

# அரிசி கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

## புதிய தகவல் வெளியானது



*நா.தினுஷா*

அரிசி இறக்குமதிக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த தினத்தின் பின்னர் நாட்டுக்கு வந்த 207 அரிசி கொள்கலன்கள் விடுவிக்கப்படாமல் இன்னும் கொழும்பு துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ளதாக சுங்கப்பிரதி...

» 02 பக்கம்

# மருந்துகளின் விலைமாற்றம்

## அரசின் தீர்மானம் விரைவில்



மருந்துகளுக்கான விலை நிர்ணய குழுவுக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவால், விலைக் கட்டுப்பாடு தொடர்பில் நேரடி தீர்மானம் எதுவும் எடுக்க முடியாமல் உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

» 02 பக்கம்



# பார் லைசன்ஸ் விவகாரத்தில் மௌனம் காப்பவர்களும் ஊழல்வாதிகள் தான்

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் குற்றச்சாட்டு



"பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை. இவர்களும் ஊழல்வாதிகள்தான்" - என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உடுப்பிட்டி மதுபானசாலை ஏன் தொடர்ந்தும் இயங்க வேண்டும் என்பது தொடர்பில் வழக்கு சாட்சியமளிப்பு இடம்பெற்று வருகிறது.

நாட்டிலே அதிகரித்த மதுபானசாலைகள் தொடர்பில் பல பிரச்சினை எழுந்துள்ளது. அதிகரித்த மதுபான பாவனையால் நேற்றும் பருத்தித்துறையில் வாள்வெட்டு, கத்திக்குத்து இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இன்று (நேற்று) நீதிமன்றின் முன் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான நிலை நாட்டுக்கு நல்லதல்ல.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சமாக கடந்த காலத்தில் பார் லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. இலஞ்சத்தை ஒழிப்போம், பார் லைசன்ஸ் விவகாரத்தை வெளிப்படுத்துவோம் என்று வந்தவர்கள் இன்று வரை அதனை வெளிப்படுத்தவில்லை.

இவர்களும் இலஞ்சத்துக்கு துணை போனவர்களாகத்தான் பார்க்க முடியும். நாம் சவால் விடுக்கிறோம், முடிந்தால் பார் லைசன்ஸ் விவகாரத்தை உடன் வெளியிடுங்கள் இல்லையேல் நீங்களும் ஊழல்வாதிகள் தான்.

இலங்கை விடயம் சம்பந்தமாக தி.மு.க கனிமொழியுடன் சந்திப்பை நடத்தியிருந்தோம். மத்திய அரசில் தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை குறைந்துள்ளது.

இலங்கை தமிழர்கள் தீர்வு விடயத்தில் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு மூன்று ஆண்டுகள் தேவை என்று கூறுகிறது. அவ்வாறு தேவையில்லை. ஏற்கனவே இணங்கிக் கொண்ட விடயம். எனவே இவ்வளவு காலம் தேவையில்லை. காலத்தை இழுத்தடிப்பது அதை இல்லாமல் செய்வதற்கான ஒரு திட்டம்.

தமிழரசு தலைமை தொடர்பிலும் புதிய அரசியலமைப்பு தொடர்பிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பேசிவருகின்ற விடயம் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி (நாளை) மத்திய குழு கூட்டத்தில் பேசி முடிவெடுப்போம் என்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

### தபால்துறை...

தேவைப்பாடானது என்றும் அந்த முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட தொழிற்சங்க பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 19ஆம் திகதியின் பின்னர் முன்னறிவித்தல் எதுவுமின்றி தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தயங்கமாட்டோம் என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஒருங்கிணைப்பாளர் சரத் சந்திரபிரிய சுட்டிக்காட்டினார்.

தமது தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்து நேற்று முன்தினம் (15) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளின்போது தற்போதைய தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க ஒருநாள் சுகயீனபோராட்டத்தை முன்னெடுக்க அவரின் தொழிற்சங்கத்துக்கு தலைமைத்துவத்தை வழங்கியிருந்தார். மின்சார சபையிலுள்ள ரஞ்சன் ஜயலாலின் தொழிற்சங்கமும் எங்களுக்கு ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. அந்தப் போராட்டங்களின்போது 20,000 ரூபாவால் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்குமாறே கோரிக்கை முன்வைத்திருந்தோம். ஆனால், அமைச்சர்களானதும் தற்போது தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மறந்துவிட்டே செயற்படுகிறார்கள்.

கோட்டா முறையில் தொழிற்சங்க பிரச்சினைக்கு தீர்வு வழங்க முயற்சிக்கிறார்கள். மஹிந்த ஜயசிங்க கல்வித் துறையிலுள்ள தொழிற்சங்க பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயற்சிக்கிறார். ஏனையவர்கள் அவர்களுக்கு தொடர்புடைய தொழிற்சங்கப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முயற்சித்து வருகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு முன்னர் ரணிலினால் முன்னெடுக்கப்பட்ட சகல வேலைத்திட்டங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் செய்தார்கள். ஆனால் தற்போது ரணில் சென்ற பாதையிலேயே இந்த அரசாங்கமும் பயணித்துக்கொண்டிருக்கிறது. ஆணைக்குழுக்களுக்குக் குழுக்களுக்கும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த இவர்களே தற்போது குழுக்களை அமைத்து பிரச்சினைகளை மூடி மறைக்க முயற்சிக்கிறார்கள் என்பது தெளிவாக தெரிகிறது.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரச பணியாளர்களுக்கு 20,000 ரூபா அடிப்படை சம்பளத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும். இதற்கு முன்னர் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும் தொழிற்சங்கங்களிடம் யோசனைகளையும் நிலைப்பாடுகளையும் பெற்றுக்கொள்வார்கள். ஆனால், இந்த அரசாங்கம் எங்களின் தொழிற்சங்கங்களிடம் எந்தவொரு யோசனையையும் கோரவில்லை.

அதேபோன்று, அரச சேவைக்கான புதிய நியமனங்கள் முழுமையாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மொத்தமாக 7,788 ஆக இருக்க வேண்டிய தபால் ஊழியர்களின் எண்ணிக்கையில், கடந்த மே மாதத்துடன் 1,662 பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே இந்த நிலைமையை கவனத்திற் கொண்டு புதிய நியமனங்களை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அரசாங்கத்துக்கு ஆதரவளித்த அரச உத்தியோகத்தர்களை புறந்தள்ளிவிட்டே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. எனவே, அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை 20,000 ரூபாவால் அதிகரித்தல், புதிய நியமனங்களை வழங்குதல், தபால் சேவையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றாவிட்டால் எதிர்வரும் 19ஆம் திகதியின் பின்னர் தபால் சேவைப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க நேரிடும் என்றார்.

### மருந்துகளின்...

இதன் காரணமாக மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க தனியான பொறிமுறையை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய, இந்த பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதுடன் எதிர்வரும் சில தினங்களில் அந்த பொறிமுறைக்கான வர்த்தமானியை வெளியிடக்கூடியதாக இருக்கும். அதனூடாக அநேகமான மருந்துகளின் விலையை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் ஹங்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையை விதிப்பதற்கு தனியான குழுவொன்று இருக்கின்றது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கீழே இந்தக் குழு செயற்படுகிறது. இந்தக் குழுவுக்கு அப்பால் மருந்துகளுக்கான விலையை நிர்ணயிப்பதற்கு தனியான பொறிமுறை தயாரிக்க வேண்டியுள்ளது. ஆனால், கடந்த அரசாங்கங்களினால் அந்த பொறிமுறை தயாரிக்கப்படவில்லை.

இருந்தபோதும் ஓரளவு விலை நிர்ணயத்தை இந்தக்குழு மேற்கொண்டு வந்துள்ளது. இந்தக்குழுவின் செயற்பாடு தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலும் மேற்கொள்ளப்பட்டது. ஒருவருடத்துக்கு மேல் இந்தக் குழுவுக்கு தடையுத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. அதனால், மருந்துகளுக்கான விலை நிர்ணயத்தில் நேரடியாக தலையிடுவதற்கு அரசாங்கத்தால் முடியாமல் இருக்கிறது. இது மிகவும் அரசாங்கத்துக்கு துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும்.

மருந்துகளின் கட்டுப்பாட்டு விலைத் தொடர்பில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தோம். ஆனால் அவை தோல்வியடைந்துள்ளன. இதற்கான பொறிமுறையை தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம். எனவே, இன்னும் சில தினங்களில் மருந்துகளுக்கான விலை நிர்ணயம் தொடர்பிலான வர்த்தமானியை வெளியிடக் கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கிறோம்.

அதன் பின்னர் சாதாரண முறையினூடாக அநேகமான மருந்துகளுக்கான விலை கட்டுப்பாட்டை விதிக்கக் கூடியதாக இருக்குமென்று கருதுகிறோம். அதன்போது அநேகமான மருந்துகளின் விலை கட்டுப்பாட்டுக்கு வரும் என்பதுடன் மறுபுறம் டொலரின் பெறுமதி குறைவால் ஏற்படும் இலாபமும் சில மருந்துகளுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் வேறுசில முறைகளினூடாக மருந்துகளின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுத்தோம். ஒருசில நிறுவனங்கள் அவர்களாகவே மருந்துகளின் விலையை குறைக்க நடவடிக்கை எடுத்தார்கள். எனவே புதிய பொறிமுறையுடன் மேலும் மருந்துகளின் விலை குறைவடையும் என்று எதிர்பார்க்கிறோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

### அரிசி கொள்கலன்கள்...

அத்தியட்சகரும் ஊடகப் பேச்சாளருமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

மேலும், 10ஆம் திகதியின் பின்னர் அரிசி கொள்கலன்களுடன் இரு கப்பல்கள் நாட்டுக்கு வந்தன. இவ்விரு கப்பல்களிலும் 353 அரிசி கொள்கலன்கள் இருந்ததுடன் அவை தரையிறக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 3,800 மெற்றிக் தொன் அரிசி தொகையை கொண்ட 147 அரிசி கொள்கலன்கள் நேற்று விடுவிக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

மீதமுள்ள 207 கொள்கலன்களை விடுவிக்க வேண்டுமெனில் அரசாங்கத்தின் விசேட அனுமதி தேவை என்றும் சுங்க பிரதி அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்டிருந்த காலம் கடந்த 10ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது. இருந்தபோதும் 10ஆம் திகதியின் பின்னர் அரிசி கொள்கலன்களுடன் இரு கப்பல்கள் நாட்டுக்கு வந்தன. இவ்விரு கப்பல்களிலும் வந்த கொள்கலன்கள் கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் தரையிறக்கப்பட்டன. இவ்விரு கப்பல்களிலும் இருந்த 353 கொள்கலன்கள் தற்போதும் கொழும்பு துறைமுகத்தில் தரையிறக்கப்பட்டுள்ளன. இருந்தபோதும் அரிசி இறக்குமதிக்கான காலம் 10ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளதால் அரசாங்கத்தின் விசேட அனுமதியின்றி இந்த கொள்கலன்களை விடுக்க முடியாமல் இருக்கின்றது.

இந்த அரிசி தொகையில், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 147 அரிசி கொள்கலன்கள் இருக்கின்றன. இந்த கொள்கலன்களில் 3,800 மெற்றிக் தொன் அரிசி உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த அரிசித் தொகையை வெளியிடுவதற்கு அரசாங்கத்தினால் இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதால் அவற்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள கொள்கலன்களிலுள்ள அரிசியை விடுவிப்பதற்கு அரசாங்கத்தினால் விரைவாக தீர்மானம் எடுக்கப்படும். அந்த தீர்மானத்தின் பின்னர் மீதமுள்ள கொள்கலன்களையும் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளோம். கொள்கலன் நெருக்கடி தொடர்பில் நிலவும் சிக்கல் நிலைமை தொடர்பில் கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பிரச்சினையை தனியே சுங்கத்தினால் மாத்திரம் நிவர்த்திக்க முடியாது. ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்காக 2,379 கொள்கலன்கள் நேற்று சுங்கத்துக்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. அவற்றில், நேற்று பிற்பகல் வரை 1,904 கொள்கலன்கள் சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றை இறக்குமதியாளர்கள் உரிய நேரத்தில் எடுத்துச் சென்றிருக்கவில்லை. எதிர்காலத்தில் கொள்கலன்களின் நெரிசல் குறைவடையுமென எதிர்பார்க்கிறோம்.

இந்த கொள்கலன் நெருக்கடியை குறைப்பதற்காக சுங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஆசிய கொள்கலன் முனையத்தை பயன்படுத்த தீர்மானித்துள்ளோம். சுங்கப் பரிசோதனைகளின் பின்னர் ஏனைய பரிசோதனைகள் நிறைவடையும் வரை ஆசிய கொள்கலன் முனையத்தில் வைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினால் ஏனைய முனையங்களில் நாளாந்தம் பரிசோதனை செய்யப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கையை 40- 50 சதவீதமான அதிகரித்துக்கொள்ள கூடியதாக இருக்கும். அதனூடாக எதிர்வரும் ஐந்து நாட்களில் கொள்கலன்களின் நெரிசல் குறைந்துவிடும்.

இந்த செயற்பாடுகளுக்கு லொறி சாரதிகள், இறக்குமதியாளர்கள் மற்றும் வெளியிடும் அதிகாரிகளின் ஒத்துழைப்பின்றி இதனை நடைமுறைப்படுத்த முடியாது. இருந்தபோதும் இன்னுமொரு முனையத்துக்கு இந்த கொள்கலன்களை கொண்டு செல்வதால் சிக்கல் ஏற்படுவதாக லொறி சாரதிகள் கூறுகிறார்கள். எனவே, இது தேசிய பிரச்சினை என்பதால் ஒருசில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றே சகலருடனும் கோருகிறோம் என்று குறிப்பிட்டார்.

### 'வளமான நாடு -...

பீஜிங்கில் நேற்று (16) பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே சீனப் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சீனப் பிரதமர் லி சியாங் சிநேகபூர்வமாக வரவேற்றார்.

மேலும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் சீனப் பிரதமர் லி சியாங் உறுதியளித்தார்.

ஊழலற்ற நாட்டை உருவாக்கும் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு சீனப் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, பாஹியன் பிக்குவின் காலத்துக்கு முன்பிருந்தே சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு காணப்பட்டதென கூறினார்.

அதேபோல் வறுமையை ஒழித்து இலங்கையை டிஜிட்டல் மயமாக்குவதற்கான தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் சீனப் பிரதமரிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

தற்போதும் இலங்கைக்கு சீன அரசாங்கம் வழங்கிவரும் உதவிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதற்காக சீன அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும் இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால நட்புறவை மேம்படுத்தல் மற்றும் முதலீட்டை ஊக்குவித்தல் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் கலாசார பரிமாற்றம், வர்த்தகம் மற்றும் அரசியல் ஒத்துழைப்பு குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### அதானி மின்திட்டம்:...

சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் மன்னார் விடத்தல்தீவு பகுதியில் காற்றாலை மின் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக இந்திய நிறுவனமான அதானியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய தீர்ப்பளிக்கக்கோரி இலங்கை பசுமை அமைப்பின் தலைவர் சங்க்க சந்திம அபயவர்தன தாக்கல் செய்த ரிட் மனுவை மே 23 ஆம் திகதி விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எம்.யூ.பி.கரலியத்த முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்தத் திட்டம் தொடர்பான பல முக்கியமான வழக்குகள் அடுத்த மார்ச் மாதம் உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட உள்ளதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார். அதேசமயம் இந்தத் திட்டம் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அரச சட்டத்தரணி நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்தே மனுவை மே 23 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த காற்றாலை மின் திட்டம் செயற்படுத்தப்பட்டால், இலங்கைக்குள் இடம்பெயர்ந்து வரும் பறவைகள் நுழையும் பாதை பாதிப்படையும் என்றும் அதனால் அதிக எண்ணிக்கையிலான பறவைகள் இறக்கும் அபாயம் இருப்பதாகவும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சம்பந்தப்பட்ட திட்டத்தை செயற்படுத்துவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ளார்.

### சந்தோஷ் ஜா - சஜித்...

விவகாரங்கள் பல குறித்து இங்கு இரு தரப்பினரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதோடு, அருகிலுள்ள அண்டை நாடு என்ற வகையில் பல தசாப்தங்களாக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது தனது நன்றியைத் தெரிவித்தார். அவ்வாறே, நமது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றி கொண்டு, வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை தொடர்ந்து வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

### அம்பாந்தோட்டையில்...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இலங்கைக்கு கிடைத்த பாரிய முதலீட்டை குறிக்கும் வகையில் இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சீனாவின் சினொபெக் முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (16) காலை இடம்பெற்றது.

இந்த 3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கீழ் 02 இலட்சம் கொள்ளளவுடைய எண்ணெய் தாங்கிகளை கொண்டுள்ளதுடன், அவற்றில் பெருமளவான தொகையை ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த இந்த புதிய முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதுடன் அம்பாந்தோட்டையின் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்தும். அத்துடன் முழு இலங்கை மக்களுக்கும் இதன் பலன் மிக விரைவில் கிடைக்கப்பெறும்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### மன்னாரில் பட்டப்பகலில்...

இதன்போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதன்போது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் படுகாயமடைந்த இரு ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் (வயது-61) மற்றும் செல்வக்குமார் யூட் (வயது-42) என தெரிய வந்துள்ளது. படுகாயமடைந்த மற்றுமொரு ஆண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். உயிரிழந்த இருவரும், காயமடைந்த ஆண் ஒருவரும் நேற்று வியாழக்கிழமை (16) மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெறவிருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்தவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றதாக தெரிய வருகிறது.

மன்னார், நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு நடைபெற்ற இரட்டை படுகொலையை தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில் இவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற மாட்டு வண்டி சவாரியின்போது ஏற்பட்ட தர்க்கத்தை தொடர்ந்து ஜூன் மாதம் 10ஆம் திகதி சகோதரர்கள் இருவரை எதிர்த்தரப்பினர் படுகொலை செய்திருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் மன்னார் நீதிமன்றில் நடைபெற்று வரும் நிலையில், நேற்றும் வழக்கு விசாரணை நடக்கவிருந்தது. படுகொலை தொடர்பில் சாட்சியமளிக்க வந்தவர்கள் மீதே நேற்று துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரிகளை கைது செய்ய மன்னார் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, பட்டப் பகலில் நீதிமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தடுக்க முடியாத பொலிஸார், குற்றவாளிகளையும் கைது செய்ய முடியாமல் போனமை தொடர்பில் மக்கள் பொலிஸார் மீது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்தில் ஒரு பகுதியில் நீதிமன்ற வளாகமும் அங்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸாரும் கடமையில் இருந்த நிலையில் மறுபக்கம் மன்னார் மாவட்ட போக்குவரத்து பொலிஸாரின் அலுவலகம் காணப்பட்ட நிலையில் சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் இராணுவ முகாம் காணப்பட்ட நிலையில் குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் சந்தேக நபர்களும் தப்பிச் சென்றுள்ளமை மன்னார் மாவட்ட பொலிஸார் மற்றும் இராணுவத்தின் பாதுகாப்பு கடமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாகவே குறித்த சம்பவத்தில் உயிரிழந்த நபர் மீது கடந்த வருடம் பொலிஸ் சீருடைக்கு ஒத்த சீருடையுடன் வருகை தந்த நபர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட நிலையில் குறித்த நபர் தெய்வாதீனமாக அப்போது உயிர் தப்பியிருந்தார்.

அதேநேரம் சம்பவத்தின் பின்னணியில் உள்ள வழக்கு ஒன்றுடன் தொடர்புபட்ட இரு நபர்கள் முன்னதாகவே அடம்பன் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் ஒரு வருடம் கடந்த நிலையிலும் குறித்த கொலை தொடர்பிலோ கொலை முயற்சி தொடர்பிலோ பொலிஸார் எந்த வித கைது நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் நேற்று நீதிமன்றத்துக்கு முன்பாகவே இடம்பெற்ற குறித்த கொலை சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கியுள்ளதுடன் பொலிஸார் மீதும் அவர்களின் விசாரணை நடவடிக்கைகள் மீதும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னைய துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் கொலை சம்பவங்கள் போன்று சம்பவத்தின் பின்னர் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அப்பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கெமராக்களையும் பரிசோதனை செய்து வருகின்றனர். இருப்பினும், இதுவரை குறித்த துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நாமல் ராஜபக்ஷவுடன்...

சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (15) கொழும்பில் இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், முதலீடுகள் குறித்து விசேடமாக கலந்துரையாடப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.

மேலும், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சித் திட்டங்கள் மற்றும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள வேறு துறைகளுக்கிடையிலான பன்முகத்தன்மை கொண்ட பிரச்சினைகள் குறித்தும் கருத்து பரிமாறப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ,

பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் நாட்டு மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் அண்டைய நாடுகளுக்கு முன்னுரிமை அளித்தல் என்ற பொதுஜன பெரமுனவின் கொள்கையை இந்திய உயர்ஸ்தானிகருக்கு எடுத்துரைத்ததாகவும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நீண்டகால வலுவான அபிவிருத்தி ஒத்துழைப்புகள் இருந்துவருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோன்று இரு நாட்டு உறவுகள் தொடர்பில் இதுபோன்று நீண்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வயலில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு தீவைப்பு!



முல்லைத்தீவு ,மல்லாவி, கல்விளான் பகுதியில் வயல் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் (15) இனந்தெரியாத நபர்களினால் தீவைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

கல்விளான் பகுதியில் வயற்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த விவசாயி ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீமூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் தை மாதம் 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**ரிஷபம்** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப்போகின்றீர்கள். முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**மிதுனம்** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**கடகம்** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள். குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**சிம்மம்** உங்கள் உடல் இன்று ஆரோக்கிய மாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைப்படும் நாள்.

**துலாம்** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள். நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**தனுசு** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். பட்டக் கல்வி குறித்து நல்ல முடிவை எடுப்பீர்கள்.

**மகரம்** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**கும்பம்** எதிர்பாராத வகையில் உங்கள் புகழ்,அந்தஸ்து உயரப் போகின்றது. அரச வகையில் இலாபம் உண்டு.

**மீனம்** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது. இன்றைய நாள் உங்களுடையது. நல்லதையே நினையுங்கள்.

**திதி** : சதுர்த்தி மு.ப.10.19 வரை பின் பஞ்சமி

**நட்சத்திரம்** : மகம் பி.ப.12.44 வரை பின் பூரம்.

**பிறை** : தேய்பிறை

**யோகம்** : மரண யோகம் பி.ப.12.44 வரை பின் அமிர்த யோகம்

**வார சூலை** : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : காலை 6.27 – 9.27 மணி வரை. காலை 10.27 – 10.27 மணிவரை. பகல் 1.27 – 3.27 மணிவரை. மாலை 5.27 – 6.27 மணி வரை.

**ராகு காலம்** : 10.57 – 12.27 மணிவரை

**எமகண்டம்** : 3.27 – 4.27 மணிவரை

**குளிகை** : 7.57 – 9.27 மணிவரை

**சந்திராஷ்டமம்** : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 12.44 மணிவரை**

பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 12.44 மணிக்குமேல்**

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**


**விசேட தினம்** : சங்கடஹர சதுர்த்தி

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# மீளச் செயற்படும் வாழைச்சேனை காகித ஆலை



வாழைச்சேனை காகித ஆலை மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளதாக தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் வெளியிட்ட அறிக்கையில், காகித ஆலையில் செயலிழந்த இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்ட பிறகு செயற்பாடுகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பெப்ரவரியில், தேசிய பொருளாதார மற்றும் இயற்பியல் திட்டங்கள் குறித்த பாராளுமன்ற மேற்பார்வைக் குழு, வாழைச்சேனை காகித ஆலையை மூடுவதற்கான திட்டத்துக்குப் பதிலாக, பொது-தனியார் கூட்டு முயற்சியாக நடத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாக உறுதியளித்தது.

வாழைச்சேனை தொழிற்சாலையின் இயந்திரங்கள் 1956இல் இறக்குமதி செய்யப்பட்டதால், பழுதுபார்ப்புக்கு சுமார் 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

1.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவழித்து இயந்திரங்களில் பழுதுபார்ப்பு செய்யப்பட்டால், ஒரு நாளைக்கு 05 தொன் உற்பத்தி செய்வதன் மூலம் மாதத்துக்கு ரூ. 22 மில்லியன் இலாபம் ஈட்ட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கை பால் உற்பத்தியில் பின்னடைவு

## கடற்றொழில் அமைச்சர் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி நிருபர்)



இலங்கையினுடைய பால் உற்பத்தியானது 1977ஆம் ஆண்டுக்கு முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஹைலண்ட் நிறுவன அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;ஹைலண்ட் நிறுவனம் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனம். அதனை முற்றுமுழுதாக விற்றுத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அப்போது நாம் தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஹைலண்ட் நிறுவனத்தை தாரை வார்ப்பதை தடுத்து நிறுத்தியிருந்தோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, கடந்த 2004-2005 காலப் பகுதிகளில் அமைச்சராக இருந்த வேளையில் தான் நட்டத்தில் இயங்கிய ஹைலண்ட் நிறுவனத்தை இலாபகரமான நிறுவனமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த வருடம் கூட இந்த நிறுவனம் பல மில்லியன் ரூபாக்களை வருமானமாக ஈட்டியுள்ளது. அந்த பெருமை அனைத்துமே தற்போதைய ஜனாதிபதியையே சாரும்.

எதிர்காலத்தில் ஹைலண்ட் நிறுவனத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது. இந்த நிறுவனம் ஊடாக நாட்டில் பால் உற்பத்தியை, கால்நடை வளர்ப்பை ஊக்கப்படுத்த வேண்டும்.

இந்த நிறுவனம் ஊடாக பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கும். அதனூடாக நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். 1977ஆம் ஆண்டுக்கு முன்னர் 60 சதவீதமாக காணப்பட்ட இலங்கையின் பால் உற்பத்தி இன்று 10 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

பால் இறக்குமதிக்காக எமது பணத்தை இழக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. அந்தவகையில் தற்போது பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்புக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகின்றது. அதற்குரிய கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதன் ஊடாக டொலர் இழப்பை தடுக்க முடியும். அதேநேரம் தேசிய உற்பத்தியையும் அதிகரிக்க இயலும். அதன் ஓர் அங்கமாகவே பால் உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்யும் ஹைலண்ட் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் ஆதரவளிக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# சின்னத்தோட்டம் குப்பைமேட்டை கிண்ணியா நகரசபை விரைவாக அகற்ற வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் வலியுறுத்து

(பதுர்தீன் சிஹானா)



திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட சின்னத்தோட்டம் குப்பை மேட்டை கிண்ணியா நகர சபை விரைவாக அகற்ற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.குகதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை கிண்ணியா பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (15) கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

கிண்ணியா, சின்னத்தோட்டம் பகுதியில் வாழ்ந்துவரும் மக்கள் அருகே உள்ள குப்பை மேட்டினால் பாரிய சுகாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். இக்குப்பை மேட்டில் உள்ள குப்பைகளை நேர்த்தியான முறையில் கழிவு மேலாண்மை செய்யவேண்டும் எனவும் நகர சபையின் செயலாளரை கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இங்கே தேங்கியுள்ள அதீத உணவுக் கழிவுகள் அயலிலுள்ள யானைகளை ஈர்க்கும் விதமாக உள்ளதுடன், இந்த குப்பைமேட்டுக்கு அருகாமையில் ஆலங்கேணி, ஈச்சந்தீவு, சின்னத்தோட்டம், பாரதிபுரம் முதலிய கிராம மக்கள் பயன்படுத்துகின்ற இந்து மயானம் அமைந்துள்ளது.

குப்பை மேட்டில் உணவு உண்ண வருகின்ற காட்டு யானைகள் இரவு பகலாக அங்கேயே தரித்து நிற்பதனால் மக்கள் மயானத்தில் சடலங்களை அடக்கம் செய்வதற்கோ குடியிருப்புகளில் வசிக்கவோ முடியாத நிலை உருவாகியுள்ளது.

எனவே குறித்த குப்பை மேட்டை அங்கிருந்து விரைவாக அகற்ற கிண்ணியா நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு இக்குப்பை மேட்டைச் சுற்றி 600 மீற்றர் நீளமான மின்சார வேலி அமைக்க வேண்டும் என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினரிடம் கேட்டுக் கொண்டார்.

மேலும், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலைச், சேனைக் கிராமத்தில் வசித்து வந்த தமிழ்மக்கள் அப்பகுதியில் சந்தைக் கட்டிடத் தொகுதி, இளைஞர் வலுவூட்டல் நிலையம், சிறுவர் பூங்கா ஆகியவற்றை அமைக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டு அங்கிருந்து இடம்பெயர்க்கப்பட்டு பாரதிபுரம் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டனர்.

இடம்பெயர்க்கப்பட்ட வேளையில் அவர்களுக்கு தேவையான கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடம், தாய் சேய் நலன் பேணல் நிலையம், விளையாட்டு அரங்கு, கோயில் முதலியவற்றை அமைப்பதற்கென 06 ஏக்கர் காணி வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது,

எனினும், 20 ஆண்டுகள் நிறைவடைந்தும் இந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, கரையோர பாதுகாப்புத் துறை , பிரதேச சபை, பிரதேச செயலகம் உள்ளிட்ட நிறுவனங்கள் இதனை விரைந்து நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

## வாகன சந்தை – அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BDY-40xx | BAJAJ | CT 100 |
| NC BEB-24xx | BAJAJ | PULSAR 135 LS |
| NC BAM-32xx | BAJAJ | PULSAR 150 |
| NC BBE-34xx | BAJAJ | DISCOVER 100 |
| NC BDJ-62xx | BAJAJ | CT 100 |
| NC XU-53xx | BAJAJ | PULSAR 150 |
| NC BAM-86xx | BAJAJ | DISCOVER DTS-SI 100 |
| NC BHU-03xx | HONDA | DIO SCV 110 |
| SP BHA-75xx | HONDA | DIO |
| NW BIP-31xx | HONDA | DIO SCV 110 |
| NW BFM-47xx | HONDA | DIO SCV 110 |
| NC BCG-40xx | HONDA | DIO SCV 110 |
| NC BGS-80xx | HONDA | DIO SCV 110 |
| NC BFV-43xx | YAMAHA | RAY-ZR |
| NW BIO-44xx | YAMAHA | RAY-ZR |
| NC BGR-19xx | TVS | SCOOTY PEPT |

இடம்:–இல: 47/49, ஜயவேவ வீதி, யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்.

பார்வையிடும் திகதி:–20.01.2025(காலை 8.30 முதல்10.30 வரை)
மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:–20.01.2025 காலை 10.30 மணிமுதல்

விஸ்வா:–0774787096 தரிந்து:–0773147609

துரிதஅழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:– 0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

நிபந்தனைக்குட்பட்டது

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பி.எல்.சி.
தலைமை அலுவலகம் -146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை

# காஸா போர் நிறுத்தம் மக்களுக்கான ஆறுதல்

காஸா போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான புதிய வரைபு ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, கட்டாரில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்குமிடையே விரைவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கும் தங்களிடம் பணயக் கைதிகளாக உள்ளவர்களை விடுவிப்பதற்குமான வரைபு ஒப்பந்தத்துக்கு ஹமாஸ் அமைப்பினர் வாய்மொழியாக ஒப்புதல் அளித்துள்ளனர். எனினும், இதை அவர்கள் எழுத்துபூர்வமாக இன்னும் உறுதிப்படுத்தவில்லையென்று பலஸ்தீன அதிகாரிகள் கூறினர்.

அதற்கு முன்னதாகவே, போர் நிறுத்தம் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள ஒப்பந்தத் திட்டத்தின் அம்சங்களை ஹமாஸ் அமைப்பினரிடம் கட்டார் பேச்சுவார்த்தைக் குழுவினர் தெரியப்படுத்தியதாகவும் அந்த அம்சங்களை ஹமாஸ் அமைப்பினர் ஏற்றுக்கொண்டதாகவும் இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், ஹமாஸ் அமைப்பினர் வரைபு ஒப்பந்தத்தை இன்னும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கவில்லையென்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு பின்னர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே, இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்குமிடையிலான போர் நிறுத்த மற்றும் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் இதுவரை இல்லாத மிக நெருக்கத்தில் உள்ளதாக கட்டார், எகிப்து, அமெரிக்க பேச்சுவார்த்தைக் குழுவினர் மட்டுமன்றி, இஸ்ரேல், ஹமாஸ் பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே, ஹமாஸ் அமைப்பினரிடம் சிக்கியுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேல் வெளியுறவுத் துறை கிடியான்ஸார் திங்கட்கிழமை கூறியது நினைவுகூரத்தக்கது. ஹமாஸ் அமைப்பினரும் காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்குத் தடையாக இருந்த கருத்து வேறுபாடுகள் வெகுவாகக் குறைந்துள்ளதாகக் கூறியிருந்தனர்.

இஸ்ரேலுக்குள் தரை, வான், கடல் வழியாக ஹமாஸ் படையினர் கடந்த 2023 ஒக்டோபர் 07ஆம் திகதி நுழைந்து 1,200க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்தனர். அத்துடன், சுமார் 240 பேரை அங்கிருந்து அவர்கள் பணயக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர். அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதாகவும் பணயக் கைதிகளை மீட்பதாகவும் சூளுரைத்த இஸ்ரேல், காஸாவில் வான்வழியாகவும் தரைவழியாகவும் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், சர்வதேச முயற்சியின் பலனாக இஸ்ரேல்-ஹமாஸ் இடையே கடந்த 2023 நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட 7 நாள் போர் நிறுத்தத்தின்போது இஸ்ரேல் சிறைகளிலிருந்து 240 பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாக இஸ்ரேலில் இருந்து பணயக் கைதிகளாகக் கடத்திச் செல்லப்பட்ட 105 பேரை ஹமாஸ் அமைப்பு விடுவித்தது.

எனினும், போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கான பேச்சுவார்த்தை முறிந்ததைத் தொடர்ந்து காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடங்கியது. அதிலிருந்து போரை நிறுத்தவும் எஞ்சிய பணயக் கைதிகளை விடுவிக்கவும் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

கைதிகள் பரிமாற்றத்துக்குப் பிறகு காஸாவில் நிரந்தர போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு இஸ்ரேல் இராணுவம் அங்கிருந்து வெளியேற வேண்டுமென்று ஹமாஸ் அமைப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், ஹமாஸ் அமைப்பின் இராணுவத் திறனை முற்றிலும் அழிக்கும்வரை தாக்குதல் நடவடிக்கைகள் தொடருமென்று இஸ்ரேல் திட்டவட்டமாகக் கூறிவருகிறது.

இதனால் இரு தரப்பினருக்குமிடையே போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் விடுவிப்பு தொடர்பான ஒப்பந்தம் ஏற்படுவதில் இழுபறி நீடித்து வருகிறது.இந்தச் சூழலில், போர் நிறுத்த வரைபு ஒப்பந்தத்தை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அத்தகைய ஒப்பந்தக் கையொப்பமாவது இதுவரை இல்லாத வெகு நெருக்கத்தில் இருப்பதாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும், காஸாவில் போர் நிறுத்தம் ஏற்படுமென்ற நம்பிக்கை இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ள நிலையிலும், அந்தப் பகுதியில் இஸ்ரேல் தனது தீவிர தாக்குதலைத் தொடர்ந்து வருகிறது. இதனால் அங்கு இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46,707ஆக உயர்ந்துள்ளது.


இது குறித்து அந்தப் பகுதி சுகாதாரத் துறை அமைச்சகம் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கடந்த 24 மணி நேரத்தில் காஸா மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் மட்டும் 61 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, இந்தப் பகுதியில் கடந்த 2023 ஒக். 07 முதல் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46,707ஆக உயர்ந்துள்ளது. இது தவிர, இஸ்ரேல் குண்டுவீச்சில் இதுவரை 1,10,265 பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர்'- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. காஸாவில் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தம் மற்றும் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டமை வரவேற்கக்கூடியது. இது காஸா மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நிலையான மனிதாபிமான உதவிகளை வழங்க வழிவகுக்கும். அதேசமயம், இது தற்காலிக ஏற்பாடாக அமைந்துவிடக்கூடாது. ஏனெனில், ஏற்கனவே இந்தப் போரால் எக்கச்சக்க உயிர்கள் இழக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். அந்தத் துயரம் இனியும் தொடரவிடாமல் நிறுத்த வேண்டியது போர் நிறுத்த ஏற்பாட்டைச் செய்தவர்கள் முன்னுள்ள மிகப்பெரும் பொறுப்பாகும்.

அதேசமயம், ஹமாஸுக்கு எதிரான சண்டையின் பேரில் மனித உயிர்களை வேட்டையாடிய இஸ்ரேலின் தலைமை தொடர்பில் உலக நாடுகள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றன என்பதையும் பலியான உயிர்கள் தொடர்பில் எப்படியான நீதி வழங்கல் செயற்பாடுகள் இடம்பெறப்போகின்றன என்பதையும் ஜனநாயகத்தை , மனித உரிமைகளை மதிக்கும் தரப்புகள் அவதானித்துக்கொண்டிருக்கின்றன. சட்டத்தின் பிடியிலிருந்து இந்தக் கொடுங்கோலர்கள் தப்பித்தாலும் இயற்கையின் நியதியின் முன்னால் அவர்கள் ஒருநாள் பதில் சொல்லியாகவேண்டும். இப்போதைக்கு போர்நிறுத்தமானது மனித உயிர்ப்பறிப்பைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது என்பது மட்டுமே மக்களுக்கு ஆறுதலான செய்தி .

## இஸ்ரேல்-ஹமாஸ் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்து:

# 15 மாத போரை முடிவுக்கு கொண்டு வருமா?







இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கிடையில் காஸா போர்நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்த விவகாரத்தில் மத்தியஸ்தம் வகித்த கட்டார் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் தெரிவித்துள்ளன. இஸ்ரேல்-ஹமாஸ் இடையே கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடங்கி 15 மாதங்களாக போர் நடைபெற்று வந்தது.

இந்த ஒப்பந்தம் ஞாயிற்றுக்கிழமை முதல் (ஜன. 19) அமுலுக்கு வருமென்று கட்டார் பிரதமர் ஷேக் முஹமது பின் அப்துல் ரஹ்மான் அல் - தனி தெரிவித்துள்ளார்.

இந்தப் போர்நிறுத்தம், ''காஸாவில் நடைபெறும் சண்டையை நிறுத்தும், பலஸ்தீன மக்களுக்கு மிகவும் தேவையான மனிதநேய உதவிகளை அதிகரிக்கும், பணயக்கைதிகளை தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் இணைக்கும்''- என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் சில விவரங்கள் இறுதி செய்யப்பட்டு வருவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்தார். அதேநேரம், இதை ஊக்குவித்ததற்காக அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு நெதன்யாஹு நன்றி தெரிவித்தார். ஹமாஸ் தலைவர் காலித் அல்-ஹய்யா இது பலஸ்தீனத்தின் 'மீண்டு எழும் திறனின்' விளைவாக அமைந்ததென்று தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனர்கள் பலரும் இஸ்ரேல் பணயக்கைதிகளின் குடும்பத்தினரும் இந்தச் செய்தியை அறிந்து கொண்டாடினர். ஆனால், காஸாவில் போர்முனையில் பதற்றம் குறையவில்லை.

கட்டார் அறிவிப்பைத் தொடர்ந்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதலில் 20க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் நடத்தும் பாதுகாப்பு முகமை தெரிவித்துள்ளது. இதில் காஸா நகரிலுள்ள ஷேக் ரத்வான் குடியிருப்புப் பகுதியிலிருந்த 12 பேரும் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் இராணுவத்திடமிருந்து இதுகுறித்து உடனடியாக பதில் ஏதும் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ், ''போரினால் ஏற்பட்ட அதிகப்படியான பாதிப்பை சரி செய்வதே முதல் வேலை'' - என்று தெரிவித்தார். பலஸ்தீனர்களுக்கான உதவிகளை மேலும் அதிகரிக்க ஐக்கிய நாடுகள் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய எல்லை தாண்டிய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டு 251 பேர் பணயக்கைதிகளாகக் கொண்டுசெல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக பயங்கரவாத அமைப்பு என்று இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் சில நாடுகளால் அறிவிக்கப்பட்டுள்ள ஹமாஸை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் இஸ்ரேல் ஈடுபட்டு வருகிறது.

அப்போது முதல் காஸாவில் 46,700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஹமாஸ் நடத்தும் சுகாதாரத்துறை தெரிவிக்கிறது. அங்குள்ள 23 இலட்சம் மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அங்கு பரவலான சேதம் ஏற்பட்டுள்ளது. மனிதநேய உதவிகள் கிடைப்பதில் சிக்கல் இருப்பதால் உணவு, எரிபொருள், மருந்து, உறைவிடம் ஆகியவற்றுக்கான கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது.

இஸ்ரேல் படைகள் காஸாவிலிருந்து விலகும்

ஹமாஸ் 94 பணயக்கைதிகளைக் கொண்டிருப்பதாகவும் அதில் 34 பேர் இறந்திருக்கலாமென்று கருதப்படுவதாகவும் இஸ்ரேல் கூறுகிறது. மேலும், போருக்கு முன்பாக இஸ்ரேலை சேர்ந்த நான்கு பேர் கடத்தப்பட்டுள்ளனர். அதில் இருவர் இறந்துவிட்டனர் என்று தெரிவிக்கிறது.

ஆறு வாரகால முதல் கட்ட போர் நிறுத்தம் தொடங்குவதற்கு முன்பாக, இருபுறத்திலும் அமைதி நிலவ வேண்டும் என்று கட்டார் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். இந்தப் போர்நிறுத்தத்தின்போது பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 33 பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவர். அதற்கு ஈடாக இஸ்ரேல் சிறைகளில் உள்ள பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மக்கள் அதிகமாக வாழும் காஸாவின் பகுதிகளிலிருந்து விலகி கிழக்குத் திசையில் இஸ்ரேல் படை நகரும்.

இடமாற்றம் செய்யப்பட்ட பலஸ்தீனர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவர். மக்களுக்குத் தேவையான உதவிகளைக் கொண்டுவரும் நூற்றுக்கணக்கான லொறிகள் ஒவ்வொரு நாளும் உள்ளே வர அனுமதிக்கப்படும்.

அடுத்த கட்டப் போர் நிறுத்தத்தின்போது என்ன நடைபெறும்?

இரண்டாம் கட்டப் போர் நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஜனவரி 16ஆம் திகதி தொடங்கியுள்ளன. இந்தப் போர்நிறுத்தத்தின்போது மீதமுள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டு, இஸ்ரேல் படைகள் முழுவதுமாக விலகி, அந்தப் பகுதியில் நீடித்த அமைதி நிலவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றாவது மற்றும் கடைசிக் கட்டப் போர்நிறுத்தத்தின்போது காஸாவின் மறுகட்டமைப்பு நடைபெறும். இதற்கு பல ஆண்டுகள் ஆகலாம். மேலும், மீதமுள்ள பணயக்கைதிகளின் உடல்கள் இருந்தால் அவை திருப்பிக் கொடுக்கப்படும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளத் தெளிவான நடைமுறை இருப்பதாக ஷேக் முஹமது தெரிவித்தார். ''இதன் விவரங்கள் இறுதி செய்யப்பட்ட பிறகு, ஓரிரு நாட்களில் ஒப்பந்தம் வெளியாகும்'' - என்று தெரிவித்திருந்தார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ், ஒப்பந்தத்தின்படி தங்கள் பொறுப்புகளை சரியாக மேற்கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்ய இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள உதவிய கட்டார், அமெரிக்கா, எகிப்து ஆகியவை கூட்டாக வேலை செய்யும்.

''இதுவே போரின் கடைசிப் பக்கமாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம். இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்த அனைத்து தரப்பும் ஒத்துழைக்கும் என்று நம்புகிறோம்''- என்றார் ஷேக் முஹமது.

*நன்றி - பி.பி.சி. தமிழ்*

### நக்கல் நமசிவாயம்

**ஜனாதிபதி ஐயா சீனாவில சந்திப்புகளை நடத்தும்போது கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை சந்திக்கிறார்... புது செய்தியொன்றை அரசாங்கத்துக்கு சொல்லுதோ இந்தியா?**



# இன்றைய நாளில்..

- **1928 – லியோன் ட்ரொட்ஸ்கி மாஸ்கோவில் கைதுசெய்யப்பட்டார்.**
- **1946 – ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை முதலாவது கூட்டத்தை நடத்தியது.**
- **1981 – பிலிப்பைன்ஸில் 8 ஆண்டுகளுக்கும் மேலாக அமுலில் இருந்த இராணுவச் சட்டத்தை ஜனாதிபதி பேர்டினண்ட் மார்க்கோஸ் நீக்கினார்.**
- **1991 – வளைகுடாப்போர் ஆரம்பமானது.**
- **1992 – இரண்டாம் உலகப்போரின்போது கொரியப் பெண்களை பாலியல் அடிமைகளாக நடத்தியமைக்காக ஜப்பானியப் பிரதமர் கீச்சி மியாசாவா தென் கொரியாவில் மன்னிப்புக் கேட்டார்.**
- **1998 – அமெரிக்கத் தலைவர் பில் கிளின்டன் தன்னைப் பாலியல் வதைக்கு உட்படுத்தியதாக போலா ஜோன்ஸ் குற்றஞ்சாட்டினார்.**

# இணையவழி ரயில் பயணச்சீட்டு கொள்வனவில் மோசடி; ரூ. 2000 டிக்கெட்டை வாங்கி 16 ஆயிரத்துக்கு விற்பனை

## போக்குவரத்து பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவிப்பு



மலையக ரயில் மார்க்கத்தில் எல்ல செல்லும் ரயில் பயணச்சீட்டுகள் இணையதளத்தில் வெளியிடப்பட்ட 42 வினாடிகளுக்குள் அனைத்து பயணச்சீட்டுகளும் விற்று தீர்ந்துவிட்டதாக கூறப்படுவதுடன், ரயில் பயணச்சீட்டுகள் விற்பனையில் பாரியளவில் மோசடி நடைபெற்று வருவதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அனைத்து இணையவழி பயணச்சீட்டுகளையும் குறித்த குழுக்கள் வாங்கி, 2,000 ரூபா பெறுமதியான டிக்கெட்டை வெளிநாட்டினருக்கு 16,000 ரூபாவுக்கு விற்பனை செய்யும் குழுக்கள் பற்றிய தகவல்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு கோட்டை, கண்டி மற்றும் எல்ல ரயில் நிலையங்களை மையமாகக் கொண்டு இந்த மோசடிகள் நடைபெற்று வருகின்றன. இந்த மோசடி கணினிகள் தொடர்பான சிறப்பு அறிவைக் கொண்ட நபர் அல்லது குழுவால் மேற்கொள்ளப்படுவதாக சந்தேகம் இருப்பதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பான அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அதிக விலைக்கு பயணச்சீட்டுகளை வாங்குவோர் இது தொடர்பில் குற்றச்சாட்டுகளை மாத்திரம் தெரிவிப்பதாகவும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஒத்துழைப்பு வழங்காமல் இருப்பது சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் பொலிஸார் தெரிவித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வருடத்தின் தொடக்கத்தில் 2,567 டெங்கு நோயாளர்கள் பதிவு



Current Status of Dengue in Sri Lanka — As of 15.01.2025 midnight

| 2025 | 2567 |
|---|---|
| January | 2567 |

| 2024 | 49877 |
|---|---|
| December | 3604 |
| November | 3498 |
| October | 2965 |

| District/ Unit | No of Cases | |
|---|---|---|
| Colombo | 338 | 13.2% |
| CMC | 315 | 12.3% |
| Gampaha | 404 | 15.7% |
| Kalutara | 66 | 2.5% |
| NIHS | 37 | 1.4% |
| Kandy | 149 | 5.8% |
| Matale | 68 | 2.6% |
| Nuwaraeliya | 8 | 0.3% |
| Galle | 172 | 6.7% |
| Matara | 86 | 3.4% |
| Hambantota | 58 | 2.3% |
| Jaffna | 108 | 4.2% |
| Mullaitivu | 1 | 0.0% |
| Kilinochchi | 7 | 0.3% |

| District/ Unit | No of Cases | |
|---|---|---|
| Mannar | 29 | 1.1% |
| Vavuniya | 2 | 0.1% |
| Batticaloa | 141 | 5.5% |
| Trincomalee | 70 | 2.7% |
| Ampara | 7 | 0.3% |
| Kalmunai | 37 | 1.4% |
| Anuradhapura | 50 | 1.9% |
| Polonnaruwa | 12 | 0.5% |
| Kurunegala | 53 | 2.1% |
| Puttalam | 54 | 2.1% |
| Badulla | 44 | 1.7% |
| Monaragala | 51 | 2.1% |
| Ratnapura | 113 | 4.0% |
| Kegalle | 87 | 3.4% |

| Province | No of Cases | |
|---|---|---|
| Western | 1160 | 45.2% |
| Southern | 316 | 12.3% |
| Eastern | 255 | 9.9% |
| Central | 225 | 8.8% |
| Sabaragamuwa | 200 | 7.8% |
| Northern | 147 | 5.7% |
| North Western | 107 | 4.2% |
| Uva | 95 | 3.7% |
| North Central | 62 | 2.4% |

| | |
|---|---|
| High-risk MOH Areas [week 1, 2025] | 4 |
| Average Mid-night Total [Week 1, 2025] | 350 |
| Dengue Deaths in 2024 | 24 |
| Case Fatality Rate | 0.05% |

Source: NaDSys surveillance

ஜனவரி மாதத்தின் முதல் இரு வாரங்களில் 2,567 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் மாத்திரம் மொத்தமாக 1,160 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்திலேயே அதிகமான நோயாளர்கள் (404) அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 15.7 வீத அதிகரிப்பும் பதிவாகியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 338 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 13.2 வீத அதிகரிப்பும் பதிவாகியுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் 66 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த வருடத்தின் இறுதியில் மொத்தமாக 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் 24 டெங்கு மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

2024ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 2,965 நோயாளர்களும் நவம்பர் மாதத்தில் 3,498 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் 3,604 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்த 24 நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் செயலாளரைச் சந்தித்த ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர்



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமெரி (Khaled Nasser AlAmeri) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (16) காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாக இந்தச் சந்திப்பில் தூதுவர் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தற்போதுள்ள புதிய அரசியல் போக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டிய தூதுவர் காலித் நாசர் அல் ஆமேரி, கடந்த காலங்களில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழல் இருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுவதாகவும் எதிர்காலத்தில் இந்த வேலை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்தவும் இலங்கை நிபுணர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் காலித் நாசர் அல் ஆமேரி தெரிவித்தார்.

இலங்கையுடனான வர்த்தக உறவுகளை விரிவுபடுத்த ஐக்கிய அரபு இராச்சியம் தயாராக இருப்பதாகவும் எதிர்காலத்தில் இது தொடர்பாக புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள விரும்புவதாகவும் தூதுவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சிய தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான சந்திப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்த தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த இது வாய்ப்பாக இருக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# காத்தான்குடியில் பூட்டப்பட்ட வீட்டுக்குள் இருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சடலமாக மீட்பு

*காத்தான்குடி மேலதிக செய்தியாளர்*



காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி கலைமகள் வீதியிலுள்ள பூட்டப்பட்டிருந்த வீடொன்றினுள் இருந்து ஆணொருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் பொது சுகாதார பரிசோதகர் ஒருவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஏறாவூர் மிச்நகர் பொது சுகாதார பரிசோதகராக கடமையாற்றியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பூட்டப்பட்ட வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து, அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். ஸ்தலத்தலத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார், சடலத்தை மீட்டதுடன், தீவிர விசாரணை முன்னெடுத்துள்ளனர்.





*அநுராதபுரம் மாவட்ட சர்வமத குழுவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட சர்வமத தைப்பொங்கல் நிகழ்வு வரலாற்று சிறப்புமிக்க அநுராதபுரம் கதிரேசன் கோயிலில் இடம்பெற்றது. தேசிய சமாதான மண்டபத்தின் அநுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்புச் செயலாளர் நிமல் திசாநாயக்க மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக அரச சார்பற்ற இயக்கங்களின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் சுமித் ரத்நாயக்க ஆகியோரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (அநுராதபுரம் நிருபர்)*

# கந்தளாய் குளத்தின் இரு வான்கதவுகள் திறப்பு

*சீனக்குடா செய்தியாளர்*



கிழக்கு மாகாணத்தில், தற்போது பெய்து வருகின்ற கனமழை காரணமாக கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதால், நேற்று (16) குளத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இரண்டடி நீரை அவசரமாக வெளியேற்றும் முகமாக, குளத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது கந்தளாய் குளத்தில் 104,375 கன அடி நீர் உள்ளதால், மேலதிகமான நீரை வெளியேற்றுவதற்காக இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.தொடர்ந்து மழை அதிகரிக்குமாக இருந்தால், அதிகமான வான் கதவுகளை திறக்க வேண்டிய நிலை ஏற்படும். இந்த நிலையில் விவசாய நிலங்களை பாதுகாக்க முடியாமல் போகும். இதன் காரணமாகவே இன்று முற்பாதுகாப்பு நடவடிக்கையாக இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டதாகவும் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

மேலதிக நீர் வெளியிடப்படுகின்றமையால் குளத்தின் கீழ்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# முச்சக்கரவண்டி உதிரிப்பாக விற்பனையாளர்கள் பாதிக்கும் வகையில் பொலிஸார் செயற்படமாட்டர்

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு



முச்சக்கரவண்டி உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் தொழில்கள் இழக்கும் வகையில் பொலிஸார் செயற்பட மாட்டார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அனைத்து இலங்கை முச்சக்கர வண்டி உதிரிப்பாக உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்துடன் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி, 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 22/40/37 இலக்க வர்த்தமானி மூலம் முச்சக்கரவண்டிகளில் மேலதிக பாகங்களை பொருத்தக்கூடிய சட்டக் கட்டமைப்பு மற்றும் வரம்புகள் பற்றியும் அதற்கிணங்க முச்சக்கரவண்டிகளில் சட்டபூர்வமாக பொருத்தப்பட்ட பாகங்கள் அகற்றப்படமாட்டாது என்றும் அவ்வாறில்லாத ஆபத்தான முறையில் பொருத்தப்பட்ட பாகங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டது.

அதன்படி, 03 மாத கால அவகாசத்தில் முச்சக்கரவண்டி சாரதிகளை அறிவுறுத்தி, சட்டவிரோதமாக பொறுத்தப் பட்டுள்ள மேலதிக பாகங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (16.01.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.2525 | 188.6444 |
| கனேடியன் டொலர் | 201.7202 | 210.3940 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.9213 | 41.4663 |
| யூரோ | 298.0476 | 310.3782 |
| ஜப்பான் யென் | 1.8611 | 1.9358 |
| சிங்கப்பூர் டொலர் | 211.3946 | 221.1625 |
| ஸ்ரேலிங் பவுன் | 354.5875 | 368.3718 |
| சுவிஸ் பிரான்ங் | 316.4058 | 331.6272 |
| ஐ.அ. டொலர் | 291.3844 | 299.9321 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.1938 |
| குவைட் | குவைட் தினார் | 957.0183 |
| ஓமான் | ஓமான் றியால் | 766.8078 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.9712 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.6627 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.3760 |

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## ஒரு கவிஞனின் வாழ்வு தரும் படிப்பினை

***அபூ நவாஸ் அப்பாஸியர் காலத்தில் வாழ்ந்த ஒரு பிரபல கவிஞர். இவரது இயற்பெயர் ஹஸன் பின் ஹானி என்பதாகும்.***

***இவரது வாழ்வு மிகவும் பொடுபோக்கானதாக அமைந்திருந்தது. இவரது கவிதைகள் பெரும்பாலும் மது, மாது பற்றிய வர்ணனைகளாகவே அமைந்தன. இவர் தனது வாழ்வின் இறுதிக் காலத்தில் தனது தவறுகளுக்காக மனம் வருந்தியதாக வரலாறு சொல்கின்றது.***

***இவர் வபாத்தான போது இவரது ஜனாஸாவைத் தொழுவிக்குமாறு இமாம் ஷாபிஈ வேண்டப்பட்டபோதிலும் அவர் ஆரம்பத்தில் மறுத்துவிட்டார்.***

***பிறகு அபூ நவாஸின் ஜனாஸா குளிப்பாட்டப்பட்ட வேளையில் சட்டைப் பையில் இருந்து ஒரு கடதாசி கண்டெடுக்கப்பட்டதாகவும் அதில் அல்லாஹ்வை விழித்துப் பாடும் சில கவிதை வரிகள் எழுதப்பட்டிருந்ததாகவும் அந்தக் கவிதையை வாசித்த இமாம் ஷாபிஈ கண்ணீர் வடித்து அழுததாகவும் பிறகு தானே முன்னின்று அபூ நவாஸின் ஜனாஸா தொழுகையை நடத்தியதாகவும் சில வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன.***

***அந்த வரலாற்றுப் புகழ் மிக்க கவிதையின் சாதாரண தமிழ் வடிவமே இங்கு உங்களுடன் பகிரப்படுகின்றது.***

***அறபு மொழியில் எதுகை மோனையுடனும் ஓசை நயத்துடனும் உணர்ச்சி பூர்வமாகவும் பாடப்பட்ட ஒரு கவிதை இது.***

***நான் கடந்த நான்கு தசாப்த காலத்துக்கு மேலாக அவ்வப்போது உணர்வுபூர்வமாக நினைவுகூரும் அற்புதமான வரிகள் இவை.***

***இறைவா!***

***எனது பாவங்கள் எண்ணிக்கையில் பெரியவைதான்.***

***ஆனால் உனது மன்னிப்பு மிகப் பெரியது என்பதை நான் நன்கறிவேன்!***

***நல்லவரும் நன்மை செய்தவரும் மட்டுமே உன்னை உனது அருளை ஆதரவு வைக்க முடியும் என்றிருந்தால் (என்னைப் போன்ற) பாவிகள் யாரிடம் செல்வது? யாருடைய துணையை நாடுவது?!***

***இறைவா நீ ஏவிய படி பணிந்து குனிந்து உன்னிடம் இறைஞ்சுகின்றேன்!***

***நீ எனது கரங்களைத் தட்டிவிட்டால்***
***யார்தான் என் மீது கருணை கொள்வார்!***

***உன்னை உனது கருணையை நான் அடைய உன்மீது நான் கொண்டுள்ள ஆதரவையும் உனது அழகான மன்னிப்பையும் தவிர வேறு ஏதும் வழி என்னிடமில்லை! நான் ஒரு முஸ்லிமாக இருக்கின்றேன் என்பதையும் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.***

# சீன முதலீட்டாளர்களை சந்தித்தார் ஜனாதிபதி அநுர





நிலையான, வலுவான ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அழைப்பு விடுத்தார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முதலீட்டாளர்களுடனான அமர்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவுக்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் விஜயத்தின் மூன்றாம் நாளுடன் இணைந்ததாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சீனா டியான்யிங் இன்கோபரேசன் (CNTY-China Tianying Inc), சீன ஹார்பர் பொறியியல் நிறுவனம் (China Harbour Engineering Company Ltd), சீன தொலைத்தொடர்பு நிர்மாண கம்பனி லிமிடெட் (China Communications Construction Company Ltd), சீனா பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம் (China Petrochemical Corporation-SINOPEC Group), மெடலர்ஜிகல் கோபரேசன் ஒப் சைனா நிறுவனம் (Metallurgical Corporation of China Ltd), சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம்(China Civil Engineering Construction Corporation), சீனா எனர்ஜி இன்டர்நெசனல் குழும நிறுவனம் (China Energy International Group Company Ltd), குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் (The Guangzhou Public Transport Group) உட்பட பல முன்னணி சீன நிறுவனங்கள் இந்த முதலீட்டு அமர்வில் பங்கேற்றன.

அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவுக்கான இலங்கை தூதுவர் மஜிந்த ஜெயசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களின் தரம் - அங்கீகாரம் குறித்து கலந்துரையாடல்

## பிரதமர் தலைமையில் தொழிற்கல்வி அமைச்சில் முன்னெடுப்பு



நாட்டிலுள்ள அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் தர நிலைகள், தர உறுதி மற்றும் அங்கீகாரம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிலையான குழு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் வழிகாட்டலின் கீழ் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் (15) கூடியது.

அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தை உரிய மட்டத்தில் பராமரிக்கவும் அந்த உயர்கல்வி நிறுவனங்களை ஏனைய அரச உயர்கல்வி நிறுவனங்களின் நிலைக்கு நேர்மறையான முறையில் கொண்டு வரவும் தேவையான கொள்கை முடிவுகள் குறித்த முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு குழு உறுப்பினர்களிடம் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் முதன் முறையாகக் கூடிய இந்தக் குழுவின் தலைவராக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவாவும் பங்கேற்றார்.

# வனவளத் திணைக்களம் அபகரித்த மக்கள் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## ரவிகரன் எம்.பி. காட்டம்

(விஜயரத்தினம் சரவணன்)



வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து அபகரித்த காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் - முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முசலிப் பிரதேச செயலகப் பிரிவில் பெருமளவான மக்களின் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதாக கிராம மட்ட பொது அமைப்புகளால் குறித்த கூட்டத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன்போதே ரவிகரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முசலிப் பிரதேச செயலகத்தால் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதியுடன் வனவளத் திணைக்களத்திடமிருந்து 3,510 ஏக்கர் காணிகளையும் வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து 1,110 ஏக்கர் காணிகளையும் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளதாகவும் இதன்போது முசலிப் பிரதேச செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்த ரவிகரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச செயலர், கிராம அலுவலர், காணி உரிமையாளர்களுக்குத் தெரியாமல் வன இலாகா தமது எல்லைக்கற்களை இட்டு மக்களின் காணிகளை அபகரித்து வருகின்றது. அத்தோடு வனஜீவராசிகள், தொல்லியல் திணைக்களத்தினர், படையினர் என பல்வேறு திணைக்களங்களும் இவ்வாறு எமது மக்களின் காணிகளை அபகரிப்புச்செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதில் மிக அதிகளவான மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது. இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரவேண்டும். அதேபோல் நாம் இது தொடர்பில் ஜனாதிபதியுடனும் உரிய ஏனைய தரப்புகளுடனும் பேசத் தயாராக இருக்கின்றோம்.

வனவளத் திணைக்களத்தின் அபகரிப்புச் செயற்பாடே மிக மோசமாகக் காணப்படுகின்றது. எனவே வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து திருடிய காணிகளை முதலில் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

இதன்போது முசலிப் பிரதேச செயலர் கருத்துத் தெரிவிக்கையில்,

இடப்பெயர்வுக்கு முன்னர் மக்களால் பயன்படுத்தப்பட்டு, இடப்பெயர்வுக்குப் பின்னர் வனஇலாகாவால் கையகப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படவேண்டிய மக்களின் காணிகள், எதிர்காலத்தில் மக்களின் குடியிருப்புத் தேவை, விவசாயத் தேவை, மேய்ச்சல் தரை, ஏனைய பொதுத் தேவைகள் கருதி மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதியோடு வனவளத் திணைக்களத்திடமிருந்தும் வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்தும் முசலி பிரதேச செயலகம் உள்ளிட்ட மன்னாரின் ஏனைய பிரதேச செயலகங்களாலும் காணிகளை விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் பேசி இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் முசலிப் பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

# மான் - மரை கொம்புகளுடன் நால்வர் கைது



(புத்தளம் நிருபர்)

சட்டவிரோதமான முறையில் மான், மரை கொம்புகள் மற்றும் தடைசெய்யப்பட்ட சங்கு வகைகள் என்பவற்றை 13 இலட்சத்துக்கு விற்பனை செய்ய முயற்சித்த பாடசாலை மாணவன் உட்பட நால்வர் அலவ்வ பகுதியில் நேற்று முன்தினம் (15) கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமானப்படை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, புத்தளம் - கருவலகஸ்வெவ மற்றும் குருநாகல் வனவிலங்கு உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்ட கூட்டு நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் உடவலவ, கேகாலை, தெனாலேகம மற்றும் கட்டுநாயக்க ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனும் இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது, ஒன்பது அடுக்கு மான் கொம்பு, ஒரு அடுக்கு ஒற்றை மான் கொம்பு, மரை கொம்பு, எருமை கொம்பு மற்றும் விற்பனை செய்வதற்கு தடைசெய்யப்பட்ட king conch seashell சங்குகள், சந்தேக நபர்கள் பாவித்த கைத்தொலைபேசிகள், சந்தேக நபர்கள் பயணிப்பதற்கு பயன்படுத்திய சொகுசு கார் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

# பிரபல வயலின் வித்துவான் திபாஹரன் காலமானார்



பிரபல வயலின் வித்துவான் சண்முகநாதன் திபாஹரன் நேற்று முன்தினம் (15) இறைவனடி சேர்ந்தார்.

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அன்னார் வரணி வேலுப்பிள்ளை சண்முகநாதன், சுந்தரராணி தம்பதியின் கனிஷ்ட புத்திரராவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17) மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 6.00 மணிவரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (சனிக்கிழமை (18)) அவரது இல்லத்துக்கு (மஞ்சத்தடி, இணுவில்) எடுத்துசெல்லப்பட்டு நாளை மறுதினம் (19) ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# புத்தளம் இஸ்லாஹியா மகளிர் கல்லூரியின் பட்டமளிப்பு விழா




புத்தளம் இஸ்லாஹியா மகளிர் கல்லூரியின் 5ஆவது பட்டமளிப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை (14) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் 13 அணிகளைச் சேர்ந்த சுமார் 350 ஆலிமாக்கள் கலந்துகொண்டதுடன், தமக்கான பட்டங்களையும் விருதுகளையும் கௌரவத்தையும் பெற்றனர்.

தேசிய சர்வதேச பிரமுகர்கள், கல்விமான்கள் பலர் பங்கேற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி டாக்டர் பாயிஸ் முஸ்தபா கலந்துகொண்டதோடு, பிரபல மலேசிய பல்கலைக்கழகமான இஸ்லாம் மலாகா பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் டாடுக் ஹாஜ் மொஹமட் டைப் பின் டோரா மற்றும் அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வி மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி உபவேந்தர் டாக்டர் அனஸ் பின் தாஜூடின் ஆகியோர் கௌரவ அதிதிகளாக பங்கேற்றனர்.

"அறிவு மற்றும் இறை நம்பிக்கையுடன் இளம் மகளிர் சமூகத்தை வழிநடத்திய 35 வருட பயணம்" என்ற தொனிப்பொருள் தாங்கிநின்ற கல்லூரியின் ஆவணப்படம் வெளியிடப்பட்டதை தொடர்ந்து, இப் பட்டமளிப்பு விழாவில் சிறப்புரை, ஜாமிஆ நளீமியா கலாபீடத்தின் முதல்வர் ஏ.சி.அகார் முஹம்மத் வழங்கினார்.

'தூய மனம் கொள் தூதை சுமந்துசெல்' என்ற மகுடம் தாங்கிய நினைவு மலர் கல்லூரி அதிபரினால் வெளியிட்டுவைக்கப்பட்டு அதிதிகளிடம் சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய முன்னாள் அதிபர் எம்.எச்.எச்.எம்.முனீர் நினைவாக முதல் தரத்தில் சித்தி பெற்ற மாணவிகளுக்கு "Usthath Muneer Memorial Award" என்ற விருதை அறிமுகப்படுத்தி வழங்கிவைக்கப்பட்டது.

கல்லூரியை விட்டு வெளியேறிய பின்பும் கல்வித்துறையில் தம்மை மேலும் தரப்படுத்தி கொண்ட மாணவிகள் விசேடமாக கௌரவிக்கப்பட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட அதிதிகள் அடங்கலாக கொழும்பு பல்கலைக்கழக புவியியல்துறை பீடாதிபதி பேராசிரியர் பரீனா ருஸைக் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழி, கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ராஹிலா ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்துகொண்டனர்.

# நீர்கொழும்பில் 864 கிலோ பீடி இலைகள் மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)

நீர்கொழும்பு, களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது ஒருதொகை பீடி மற்றும் பீடி இலைகள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்கு கடற்படை கட்டளையின் களனி நிறுவன கடற்படையினர் நீர்கொழும்பு களப்பு பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கையை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த களப்பு பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இயந்திரப் படகு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

குறித்த இயந்திரப் படகில் சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பீடி மற்றும் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.



இதன்போது, குறித்த இயந்திரப் படகில் 29 மூடைகளில் அடைக்கப்பட்ட நிலையில், 864 கிலோ 750 கிராம் பீடி இலைகள் மற்றும் ஒரு மூடையில் அடைக்கப்பட்ட நிலையில் ஒரு தொகை பீடிகளும் கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்யும் நோக்கில் இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டுள்ள குறித்த பீடி மற்றும் பீடி இலைகள் என்பன கடற்படையினரின் கெடுபிடிகள் காரணமாக கடத்தல்காரர்கள் களப்பு பகுதியில் கைவிட்டு சென்றிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி, பீடி இலைகள் மற்றும் இரண்டு இயந்திரப் படகுகள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கை களுக்காக கட்டுநாயக்க சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

# பேராதனை பல்கலையின் பட்டதாரிகள் ஒன்றுகூடல்



பேராதனை பல்கலைக் கழகத்தில் 1986/87 கல்வி ஆண்டுக்கு தெரிவாகி 1990ஆம் 1991ஆம் ஆண்டுகளில் கலைப்பீட பொதுக் கலை மற்றும் சிறப்புக்கலை பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகளது ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் குறிப்பிட்ட வருடங்களில் பட்டம்பெற்ற அணியில் இருந்து வெளியேறியவர்களில் காலம் சென்ற 17 பேர் மற்றும் பேராசிரியர்களான அம்பலவாணர் சிவராசா, மௌலவி இப்ராஹீம் ஆகியோர்களுக்கான துஆப் பிரார்த்தனை, அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட பட்டதாரிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

# 'பொடி லெஸ்ஸி' மும்பையில் கைது

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவருமான பொடி லெஸ்ஸி என்று அழைக்கப்படும் ஜனித் மதுஷங்க, இந்தியாவின் மும்பையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது இன்டர்போலால் மேற்கொள்ளப்பட்டதுடன், இலங்கை அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் பிணையில் விடுவிக்கப்பட்ட ஜனித் மதுஷங்க, அடுத்த நீதிமன்றத் திகதிவரை பயணத் தடைக்கு உட்பட்டிருந்தார். இருப்பினும், பொலிஸ் விசாரணையில், அவர் பிணை நிபந்தனைகளை மீறி சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறியிருப்பது தெரியவந்துள்ளது.


# சிலோன் மீடியா போரத்தினால் நிர்வாக சேவை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு












சிலோன் மீடியா போரத்தின் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற "நிர்வாக சேவை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் ஒன்றிணைவும் கௌரவிப்பும்" திங்கட்கிழமை நிந்தவூர் தோம்புகண்டம் விடுதியில் தலைவர் ரியாத் ஏ. மஜீட் தலைமையில் பழீல் டீ.எஸ். அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், பதவி உயர்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சமுர்த்தி உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வி.ஜெகதீசன், என்.எம்.இன்ஜினியரிங் கன்சல்டன்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.யூ.எம் நியாஸ், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்று சபை உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். இதன்போது சிலோன் மீடியா போரத்தின் ஐந்தாம் ஆண்டை முன்னிட்டு கீ டெக் ஒன்றும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. (நூருல் ஹுதா உமர்)









# அம்பாறையில் இடைவிடாத கனமழையால் வெள்ளம்: வேளாண்மைச்செய்கை பாதிப்பு



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை டி.எஸ்.சேனாநாயக்க நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவு கடந்த செவ்வாய்க்கிழமை (14) திறந்து விடப்பட்ட நிலையிலும் இடைவிடாத மழை காரணமாக வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. சில இடங்களில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழை காரணமாக தாழ்நிலங்களும் வயல் நிலங்களும் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சவளக்கடை கமநல சேவை பிரிவில் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் மழை வெள்ளம் காரணமாக சவளக்கடை, அன்னமலை, வேப்பயடி மற்றும் 5ஆம் கொலனி போன்ற பகுதிகளில் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்த மழை வீழ்ச்சி மற்றும் சில குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது வேளாண்மை 70 நாட்கள் பயிராகக் காணப்படுவதால் குடலைப்பருவத்திலிருந்து கதிர்ப்பருவத்துக்கு மாறும் இவ்வேளையில் இவ்வாறு அதிகரித்த மழை வீழ்ச்சி மற்றும் குளங்களிலிருந்து வெளியேறும் நீர் என்பவற்றால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ளத்தினால் தாம் பாதிக்கப்பட்டு மீள முடியாத நிலையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அடுத்த வெள்ளமும் தம்மை அதிகம் பாதித்துள்ளதாகவும் விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

நெல்லுக்கான உத்தரவாத விலையை இன்னும் நிர்ணயிக்காத நிலையில் தாம் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறுவதிலும் சிக்கல் நிலவுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# மோட்டார் சைக்கிள் மோதி முன்னாள் போராளி உயிரிழப்பு

(கனகராசா சரவணன்)

வீதியில் நடந்து சென்ற மாற்றுத்திறனாளியான முன்னாள் போராளி மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இதனையடுத்து மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மோட்டார் சைக்கிளை அங்கு கைவிட்டுவிட்டு தப்பியோடிய சம்பவம் புதன்கிழமை (15) இரவு வாழைச்சேனை பகுதியில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, கறுவாக்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய விஜயநாதன் வினோசித் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வாழைச்சேனை-கிரான் வீதியிலுள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள மதுபானசாலையொன்றிலிருந்து சம்பவதினமான இரவு 8.30 மணிக்கு வீடு செல்வதற்காக வீதிக்கு நடந்து வந்த நிலையில் வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் அதனை அங்கு கைவிட்டுவிட்டு தப்பியோடியுள்ளார். இந்நிலையில் பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் கைவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்த விபத்தில் உயிரிழந்த முன்னாள் போராளி புனர்வாழ்வு பெறவில்லை என்பதுடன் அவர் காலொன்றை இழந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சுற்றுச்சூழல் செயற்றிட்டங்கள் தொடர்பான விளக்கக் கூட்டம்



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட சுற்றுச்சூழல் சட்ட அமுலாக்கல் குழுக் கூட்டம் அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (16) இடம்பெற்றது.

இதன்போது மாவட்டத்தில் சுற்றுச்சூழல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் தொடர்பான விளக்கங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன் வழங்கினார்.

மேலும் மாவட்ட மட்டத்தில் தீர்க்கப்படாத சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வு, தொழிற்சாலைகளுக்கான அனுமதி வழங்கல், திண்மக்கழிவு மற்றும் மருத்துவக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல், சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத செயற்பாடுகள், கரையோரங்களை அடையாளப்படுத்தல் போன்ற பலவேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன் (காணி), திட்டமிடல் பணிப்பாளர் வி.நவநீதன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் சுற்றுச் சூழல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# வாழைச்சேனை சுங்கான்கேணி பிரதேசத்தில் இரு இ.போ.ச.பஸ்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல்

## கண்ணாடிகள் உடைந்து சேதம்

(கனகராசா சரவணன்)

யாழ்ப்பாணத்திலிருந்து கல்முனைக்கும் மற்றும் வாழைச்சேனையிலிருந்து பொத்துவில் பகுதிக்கும் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பஸ்கள் மீதும் வாழைச்சேனை சுங்கான்கேணி 18ஆவது மைல்கல் பிரதேசத்தில் இனம் தெரியாதோர் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டனர். இதன்போது இரு பஸ்களின் கண்ணாடிகளும் உடைந்து சேதமடைந்துள்ளன. இச்சம்பவம் புதன்கிழமை (15) இரவு இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பஸ்கள் வழமைபோல போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் வாழைச்சேனை,சுங்கான்கேணி பிரதேசத்தில் சம்பவதினமான இரவு இனந் தெரியாதோரால் பஸ்கள் மீது திடீரென கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டதையடுத்து பஸ்களின் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்தன. இச்சம்பவத்தில் பிரயாணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன் எவருக்கு காயமெதுவும் ஏற்படவில்லை.

இதனையடுத்து பஸ்களிலிருந்த பிரயாணிகள் வேறு பஸ்களில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி குறித்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்தாய்வு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் 2025ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் ஏற்பாட்டில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(15) இடம்பெற்றது.

இதன்போது திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.உதுமாலெப்பை, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.டி.எம்.றாபி, மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம்.சாஹிர், உதவி பிரதேச செயலாளர் என்.எப்.அம்மா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, திணைக்களத் தலைவர்கள், பிரதிநிதிகள், மத ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள், வர்த்தக சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்தில் சுகாதாரம், கல்வி, காணி விளையாட்டு



நீர்ப்பாசனம், தோணா அபிவிருத்தி, கடலரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

# சட்டவிரோத மணல் அகழ்வு குறித்த கலந்துரையாடல்



(நாவிதன்வெளி செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நெல்லிக்காட்டு வட்டை, ஆலையடி வட்டை உள்ளிட்ட ஏனைய ஆறுகளில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்தல் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று(16) இடம்பெற்றது.

சட்டவிரோத மண் அகழ்தல் தொடர்பில் தற்போது காணப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், அதனைக் கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு மணல் அகழ்வது குறித்து முறையான பொறிமுறைகள் தொடர்பாகவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்.அஸ்லம், பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ஆர்.கஜன், அம்பாறை புவிச்சரிதவியல், அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.பாரீஸ், சம்மாந்துறை பிரதேச சபைச் செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட், சம்மாந்துறை அனைத்து விவசாய சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.எம். நௌஷாத், சம்மாந்துறை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபர், மல்வத்தை விவசாய போதனாசிரியர் எம்.டி.ஏ.கரீம், காணி உத்தியோகத்தர் டி.கே.எம்.ஜவாஹிர், கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர் உட்பட திணைக்களங்களின் பிரதிநிதிகள், கிராம சேவகர்கள் சம்மாந்துறை சட்டரீதியான மணல் அகழ்வோர் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் தேவைகள் குறித்த திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்



(திராய்க்கேணி செய்தியாளர்)


அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பானின் ஏற்பாட்டில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (16) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.உதுமாலெப்பை, நிஸாம் காரியப்பர், அஷ்ரப் தாஹிர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட், திணைக்களத் தலைவர்கள், பிரதிநிதிகள், மத ஸ்தாபனப் பிரதிநிதிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் திராய்க்கேணி சிறுவர் பூங்கா திறப்பு, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மின்சார இணைப்பு, வீதிப் புனரமைப்பு, சுகாதாரம், கல்வி, காணி, விளையாட்டு, நீர்ப்பாசனம், கடலரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள், தீகவாபி மின்சார இணைப்பு, LRC காணிப் பிரச்சினைகள் தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களை மக்களின் தேவை கருதி ஆதம்பாவா எம்.பி. பிரதேச செயலாளருக்கும் உரிய திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினார். ஜனாதிபதியின் நல்ல பல செயற்றிட்டங்களை மக்களுக்காக உரிய அமைச்சுகளூடாக இப்பிரதேசத்துக்கு கொண்டுவருவதாகவும் சபையில் தெரிவித்தார்.

# கணேசபுரம் காட்டுப்பகுதியில் இறந்த நிலையில் யானையின் உடலம் மீட்பு



(சீனக்குடா செய்தியாளர்)

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் காட்டுப்பகுதியில் யானையொன்று இறந்த நிலையில் புதன்கிழமை (15) மீட்கப்பட்டதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுப்பகுதியில் கிடங்கொன்றில் உயிரிழந்து காணப்பட்ட யானையின் உடம்பில் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

யானை எவ்வாறு உயிரிழந்தது என இதுவரை சரியாக உறுதிப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்திருக்கலாமென பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர்.

அதேவேளை, இரண்டு தினங்களுக்கு முன்னரும் சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சந்தனவெட்டை காட்டுப்பகுதியில் யானையொன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த யானையின் உயிரிழப்புச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குடிநீர், மின்சார இணைப்புக்காக நிதியுதவி வழங்கல்



(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வருமானம் குறைந்த மக்களின் குடிநீர் மற்றும் மின்சார இணைப்புக்கான நிதியுதவியை அரசாங்கம் வழங்கி வருகின்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் 109 பேருக்கான குடிநீர் இணைப்புகளும் 125 பேருக்கான மின்சார இணைப்புகளுக்குமான நிதி வழங்கப்பட்டது.

மின்சார இணைப்புக்காக 45,000 ரூபாவும் குடிநீர் இணைப்புக்காக 37,000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நேற்று(16) குடிநீர் இணைப்புக்கான நிதியுதவி பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுசைன்டீன், அக்கரைப்பற்று குடிநீர் வழங்கல் அலுவலகப் பொறுப்பதிகாரி றமீஸ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு குடிநீர் மற்றும் மின்சார இணைப்புக்கான காசோலைகளை வழங்கினர்.

# சேதமடைந்த பாலத்தை புனரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை



(திகாமடுல்ல செய்தியாளர்)

சம்மாந்துறை கமநல சேவைகள் பிரதேசத்துக்குட்பட்ட செனவட்டை உடங்கா பாலம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுகிறது. குறித்த பாலம் பற்றி உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையென விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், செனவட்டை, நெடியான்கண்டம், கொக்கநாரை போன்ற வயல் பிரதேசங்களுக்கு செல்லும் பிரதான பாதையில் இப் பாலம் அமைந்துள்ளது. இந்நிலையில், எதிர்வரும் ஒரு மாத காலத்துக்குள் இப் பகுதியில் விவசாய அறுவடை நடைபெறவுள்ளமையால் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி ஏற்படும். இதற்கு முதல் பெய்த கனமழை காரணமாக பல வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. ஆனால், அதிகாரிகள் பலர் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இதுவரை எந்த நஷ்டஈடும் வழங்கவில்லை. எனவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## MCA D பிரிவு 40 ஓவர் லீக் கிரிக்கெட் போட்டிக்கு தொடர்ந்து 5ஆவது வருடமாக அனுசரணை வழங்கும் CBL நிறுவனம்




இலங்கையின் முன்னணி உணவு உற்பத்தியாளர்களான த சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் (CBL) நிறுவனமானது, வர்த்தக கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் CBL கிண்ணத்துக்கான MCA D பிரிவு 40 ஓவர் லீக் கிரிக்கெட் போட்டிக்கு 5ஆவது வருடமாக அனுசரணை வழங்குகிறது.

மூன்று குழுக்களில் 15 அணிகள் பங்குபற்றும் இப் போட்டி 2024 டிசம்பர் 04ஆம் திகதி ஆரம்பமானதுடன் 2025 ஜனவரி 25ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியுடன் நிறைவடையும்.

இந்தச் சுற்றுப் போட்டி லீக் மற்றும் நொக் அவுட் ஆகிய இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது. லீக் சுற்றில் 30 போட்டிகளும் நொக் அவுட் சுற்றில் இறுதி ஆட்டம் உட்பட 7 போட்டிகளும் அடங்குகின்றன.

பங்குபற்றும் அணிகளும் குழுக்களும்

ஏ குழு: ஹேமாஸ் குறூப், த ரீக்கவரி ரூம், பீப்பள்ஸ் லீசிங் PLC, கலம்போ டொக்யார்ட், யொக்கோமா TWS.

பி குழு: ஏயார்போர்ட் & ஏவியேஷன், அபான்ஸ் குறூப், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, HNB பைனான்ஸ், பவர் ஹாண்ட் ப்ளான்டேஷன்ஸ்.

சி குழு: சென்ட்ரல் பைனான்ஸ், மில்லேனியம் IT, டீஜே லங்கா, டெல்மேஜ் குறூப், செலான் வங்கி.

லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு குழுவிலும் புள்ளிகள் நிலையில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகளும் 3 குழுக்களிலும் அதிசிறந்த 3ஆம் இடத்தைப் பெறும் 2 அணிகளுமாக 8 அணிகள் கால் இறுதிச் சுற்றில் விளையாடத் தகுதிபெறும்.

இப்போட்டிக்கான அனுசரணை வழங்கும் வைபவமும் ஊடக சந்திப்பும் MCA லெஜென்ட்ஸ் லங் கேட்போர் கூடத்தில் 2025 ஜனவரி 15ஆம் திகதி மாலை நடைபெற்றன. இந்த வைபவத்தில் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் சார்பாக சந்தைப்படுத்தல் முகாமையாளர் விஜித் நிஷாந்த, MCA சார்பாக அதன் தலைவர் மஹேஷ் டி அல்விஸ், உதவித் தலைவர் சிரோஷ குணதிலக்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## ஆடம்பரமாக 2025 வருடத்தை வரவேற்ற Pegasus Reef




எப்போதும் பண்டிகைக் கொண்டாட்டங்களுக்கு பிரபலமான இடமாகத் திகழும் Pegasus Reef ஹோட்டல், 2024 ஆம் ஆண்டை நிறைவு செய்து, 2024 டிசம்பர் 31ஆம் திகதி மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அதன் Crimson Eve கொண்டாட்டத்துடன் புத்தாண்டை வரவேற்றது. இங்கு ஹோட்டலின் துடிப்பான வெப்பமண்டல கருப்பொருளின் கீழ் ஆடம்பரமான நிகழ்வுகள் இடம்பெற்றன. இது பண்டிகைக் கொண்டாட்ட நிகழ்வுகளில் பங்கேற்பாளர்களைக் கவர்ந்தது. ஒவ்வொரு நிகழ்வும் பண்டிகையை அரவணைப்புடன் கொண்டாடியதோடு, ஹோட்டலுக்கு உரித்தான புகழ்பெற்ற விருந்தோம்பல் மற்றும் உயர்ந்த சேவையை அனுபவிக்கும் வாய்ப்புடன் மறக்க முடியாத நினைவுகளை உருவாக்கி விருந்தினர்களை மகிழ்வித்தது.

Crimson Eve கொண்டாட்டமானது, சந்தேகத்துக்கிடமின்றி பண்டிகையின் சிறப்பம்சமாக இருந்தது. இங்கு Freeze மற்றும் DJ Beats ஆகியோரின் அற்புதமான நேரடி கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவர்கள் மாலை முழுவதும் சூழலையும் நடனத் தளத்தையும் உயிரோட்டமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருந்தனர். விருந்தினர்கள் சுவையான buffet (புஃபே) இரவு உணவை அனுபவித்தனர். இதில் அனைத்து சுவைகளுக்கும் ஏற்றவாறு பல பாரம்பரிய உணவுகள் மற்றும் புத்தாக்கமான படைப்புகள் இடம்பெற்றிருந்தன. இவை யாவும் ஹோட்டலின் தனித்துவமான BYOB கொள்கையை பூர்த்தி செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டன. இது விருந்தினர்களுக்கு அவர்களின் சொந்தத் தெரிவில் மாலை நேரத்தை அனுபவிக்க ஒரு வாய்ப்பை வழங்கியது. குறிப்பாக, பருவ கால கொண்டாட்டத்துக்காக அமைக்கப்பட்ட வெப்பமண்டல கருப்பொருள் (tropical theme) ஆனது, கொண்டாட்டங்களுக்கு ஒரு கவர்ச்சியான மெருகூட்டலைச் சேர்த்தது.

இப்பருவகால கொண்டாட்டத்தை இத்தனை சிறப்பாக நிறைவு செய்ய முடிந்தமை தொடர்பில், Pegasus Reef ஹோட்டலின் பொது முகாமையாளர் ரேணுக் கொஸ்வத்த தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மேலதிக தகவலுக்கு, www. pegasusreefhotel.com எனும் அவர்களது இணையதளத்தைப் பார்வையிடவும்.

## ஆடம்பர கப்பற்றுறை (மெரினா) கட்டுமானத்தை ஆரம்பிக்கும் நிகழ்வைக் கொண்டாடிய கொழும்பு துறைமுக நகரம்



கொழும்பு துறைமுக நகரமானது தனது கப்பற்றுறை கட்டுமானப் பணிகளின் ஆரம்ப நிகழ்வை 2025 ஜனவரி 10 அன்று இடம்பெற்ற விசேட வைபவமொன்றில் கொண்டாடியுள்ளது. வெளிவிவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் பிரதம அதிதியாகக் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்துள்ளார். மக்கள் சீனக் குடியரசு தூதுவராலயத்தின் தூதுவரான குய் ஜென்ஹாங், கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுவின் தலைவர் ஹர்ஷ அமரசேகர, Brown and Company PLC யின் பணிப்பாளர் சபைத் தலைவரும், LOLC Holdings PLC இன் பணிப்பாளர் சபை பிரதித் தலைவருமான இஷார நாணயக்கார, LOLC Holdings PLC இன் குழும முகாமைத்துவப் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி கபில ஜெயவர்த்தன, Browns Investments PLC இன் பணிப்பாளர் கமாந்த அமரசேகர, China Harbour Engineering Company இன் முகாமைத்துவப் பணிப்பாளர் வாங் காங் மற்றும் CHEC Port City Colombo (Pvt) Ltd இன் முகாமைத்துவப் பணிப்பாளர் சியோங் ஹாங்ஃபெங் ஆகியோரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இச்செயற்றிட்டத்தின் வளர்ச்சி மற்றும் முதலீட்டுக்கான தயார்நிலை ஆகியவற்றைக் காண்பிப்பதற்கு இந்நிகழ்வு வாய்ப்பளித்துள்ளதுடன், இலங்கையிலும் தெற்காசியாவிலும் கப்பல்துறை சார்ந்த சுற்றுலாத்துறையில் முக்கியமான மைல்கல் லாகவும் மாறியுள்ளது. கொழும்பு துறைமுக நகரத்தினுள் ஆடம்பர கப்பற்றுறை கட்டுமானப் பணிகள் அனைத்தும் LOLC குழுமத்தின் மூலோபாய முதலீட்டு அங்கமான Browns Investments PLC (BI) மற்றும் China Harbour Engineering Company (CHEC) ஆகியவற்றுக்கிடையிலான கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்யும் இலங்கையின் முதலாவது நிறுவனங்களில் ஒன்றாகவும் இற்றைவரை மிகப் பாரிய முதலீட்டை மேற்கொண்டுள்ள இலங்கை நிறுவனமாகவும் BI மாறியுள்ளமை குறிப்பிடத் தக்கது. Browns Investment PLC ஆறு காணித் துண்டுகளில் முதலீடு செய்துள்ளதுடன் இதில் நான்கு காணித் துண்டுகள் கப்பற்றுறை மாவட்டத்தின் மேம்பாட்டுப் பணிகளுள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## LMDயின் முதலாவது பெருநிறுவன மகிழ்ச்சிகர சுட்டெண்ணில் வங்கித் துறையில் முதலிடம் வகிக்கும் கொமர்ஷல் வங்கி



LMD சஞ்சிகையால் வெளியிடப்பட்ட முதலாவது பெருநிறுவன மகிழ்ச்சி சுட்டெண் (CHI) இல் இலங்கையின் வங்கிகளில் கொமர்ஷல் வங்கி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதனைத் தவிர, மேலும் இந்த முன்னோடி முயற்சிக்காக PepperCube ஆலோசகர்களால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் எதிர்பார்க்கப்பட்ட 16 பண்புக்கூறுகளில் வங்கி பதிவு செய்துள்ள உயர் நிலைகளைத் தொடர்ந்து, இலங்கையின் மகிழ்ச்சிகரமான இரண்டாவது வீடுகளில் ஒன்றாகவும் தரவரிசையில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதேவேளை, கொமர்ஷல் வங்கியானது 16 பண்புக்கூறுகளில் 14 இல் மிக உயர்ந்த தரவரிசையைப் பெற்ற வங்கியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஊழியர்கள் தொடர்பான அடிப்படையான மற்றும் முக்கியமான பல அம்சங்களில் வங்கித் துறையானது திருப்திகரமான நிலையைப் பதிவு செய்திருந்தது. இதற்கிணங்க 'ஊதிய அளவுகள்', 'வெகுமதிகள் மற்றும் சலுகைகள்', 'தொழில் முன்னேற்றம்', 'பணிச் சூழல்', 'பாலின சமநிலை', 'சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு','தொழில் வாழ்க்கை சமநிலை','பணியிட பன்முகத்தன்மை,' மற்றும் 'பணியிட நெகிழ்வுத்தன்மை' போன்ற அம்சங்களில் உயர் நிலையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அதுமட்டுமன்றி, கொமர்ஷல் வங்கியானது நிதியியல் ஸ்திரத்தன்மை, பெருநிறுவன தலைமைத்துவம், பணியிட தோழமை, திறந்த கலாசாரம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றுக்காக வங்கித் துறையில் முதலிடத்தைப் பெற்றது.

வங்கித் துறையில் அதன் உறுதியான தலைமைத்துவத்துக்கு மேலதிகமாக, LMD நிறுவன மகிழ்ச்சிச் சுட்டெண் அனைத்து துறைகளிலும் இலங்கையின் முதல் ஐந்து பெரு நிறுவனங்களில் கொமர்ஷல் வங்கியை தரவரிசைப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க 16 பண்பு தரவரிசைகளில் 10 இல் மற்றும் ஒட்டுமொத்த முதல் பத்து இடங்களில் பண்புக்கூறுகளில் 15 இல் என தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

## தீர்க்கமான செயல்களின் மூலம் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடைந்த பி.எம்.எவ். பினான்ஸ் பி.எல்.சி.



பி.எம்.எவ். பினான்ஸ் பி.எல்.சி. அண்மையில் முடிவடைந்த ஆறு மாதங்களில் குறிப்பிடத்தக்க செயற்றிறனை வழங்கியது. வலுவான அடித்தளத்தை நிறுவும் தீர்க்கமான செயல்களின் மூலம் கணிசமான வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் அடைந்தது.

முக்கிய சிறப்பம்சங்கள்:

இலாபத்தில் 500% அதிகரிப்பு, நிறுவனத்தின் வலுவான நிதி நிலைமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மேம்படுத்தப்பட்ட சொத்து தரம், செயலற்றுக் காணப்படும் கடன்களில் கணிசமான குறைவு. மூலோபாய முன்முயற்சிகள் மூலமான செயற்பாட்டு திறன் வளர்ச்சி மற்றும் வாடிக்கையாளர்களை பெறல்.

நிறுவனத்தின் செயற்றிறன் குறித்து பேசிய பி.எம்.எவ். பினான்ஸ் பிஎல்சி இன் தலைவர் சந்துல அபேவிக்ரம, “எமது இந்த அற்புதமான பெறுபேறுகள் எங்கள் குழுவின் சிறந்த மூலோபாய முடிவுகளின் மூலமான பின்னடைவான நிலைமையிலிருந்து மீள கட்டியெழுப்பப்பட்டதற்கான ஓர் சான்றாகும். நிலையற்ற பொருளாதார தன்மைகள் நிலவிய காலகட்டத்தில், எங்கள் பங்குகளின் கட்டுப்பாட்டாளர்கள், முதலீட்டாளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்துக்கு நன்மைகளை வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். இந்த வளர்ச்சி எங்களின் சவால்களை வெல்லவும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளும் உறுதியையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது” -என்றார்.

தலைமை நிர்வாக அதிகாரி பேராசிரியர் அஜித் மெடிஸ் தலைமையில், பி.எம்.எவ். பினான்ஸ் பிஎல்சி ஒரு நிலைமாற்றத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளது. அவரது நியமனம் முதல், நிறுவனம் செலவை மேம்படுத்துதல், கிளையின் செயற்றிறன், பணப் பரிமாற்றங்களில் கணிசமான அதிகரிப்பு மற்றும் டிஜிட்டல் சேனல்கள் மற்றும் மூலோபாய கூட்டாண்மை மூலம் வாடிக்கையாளர் ஈடுபாட்டை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனஞ்செலுத்துகிறது.

## LOLC ஃபைனான்ஸ், இலங்கையின் முதல் பிரெய்லி உடன் இணைக்கப்பட்ட மாஸ்டர்கார்ட் கிரெடிட் கார்ட் அறிமுகம்




LOLC ஃபினான்ஸ் இலங்கையின் முதல் பிரெய்லி உடன் இணைக்கப்பட்ட மாஸ்டர்கார்ட் கிரெடிட் கார்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதி உள்ளடக்கத்தை நோக்கி ஒரு முன்னோடி நடவடிக்கையை எடுத்துள்ளது. பார்வையற்ற நபர்களுக்காக குறிப்பாக, வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் புதுமையான கார்டில் தொட்டுணரக்கூடிய பிரெய்லி கூறுகள் மற்றும் ஒரு தனித்துவமான குருட்டு உச்சநிலை, பயன்படுத்த எளிதானது மற்றும் அதிக அணுகலை செயற்படுத்துகிறது. பல்வேறு சமூகங்களின் தனித்துவமான தேவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம், இந்த முன்முயற்சியானது இலங்கையின் நிதிச் சேவைத் துறையில் ஒரு புதிய அளவுகோலை அமைக்கிறது.

“மக்களின் நாடித் துடிப்பை உணர வேண்டும்” என்ற பிரசாரத்தின் பார்வையுடன் இணைந்து, LOLC ஃபைனான்ஸ் நிதியத் தோற்றத்தை மேலும் உள்ளடக்கியதாக மாற்றியமைக்கிறது. பிரெய்லி-உடன் இணைக்கப்பட்ட கிரெடிட் கார்ட் தொடர் பல்ஸ், கோல்ட், பிளாட்டினம் மற்றும் வேர்ல்ட் கார்டுகள் மற்றும் பெண்களை மையமாகக் கொண்ட SWAIREE கார்ட் உட்பட பல்வேறு சலுகைகள் முழுவதும் நீட்டிக்கப்படும். SAVI கார்டு, பிரெய்லி வரிசையில் முதன்மையானது. பார்வையற்ற அரசுத் துறை ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பலன்கள் மற்றும் வெகுமதிகளை வழங்குவதன் மூலம் இந்த அட்டைகள் அணுகலைத் தாண்டி, அன்றாட நிதி பரிவர்த்தனைகளை மேம்படுத்தும் அனுபவங்களாக மாற்றுகின்றன. தினசரி கொள்முதல் முதல் பிரத்தியேக சலுகைகள் வரை, பிரெய்லி-உடன் இணைக்கப்பட்ட வரம்பு அனைத்து பயனர்களுக்கும் தடையற்ற நிதி பயணத்தை உறுதி செய்கிறது.

இந்த முன்முயற்சியானது LOLC ஃபைனான்ஸ் தலைமைத்துவத்தை உள்ளடக்கிய மற்றும் நிதி அதிகாரமளிப்பதில் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

## மொனிக் ஊழியர்களை பாராட்டும் ‘2024 மொனிக் லெகசி விருதுகள்’










முன்னணி நுண்-நிதி நிறுவனங்களில் ஒன்றான மொனிக், 2024 ஆம் ஆண்டுக்கான தனது ஊழியர்களைப் பாராட்டும் விழாவை அண்மையில் குருநாகல் எபிடோம் ஹோட்டலில் நடத்தியது. தேசிய வீடமைப்பு ஆணையாளரும் எல்.சி.பி. நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சிரேஷ்ட சட்டத்தரணி காமினி பெரேரா,எல்.சி.பி. பைனான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.ஜி. லீலாநந்த மற்றும் மொனிக் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி வாசல மதுவந்த ஆகியோர் இந்த நிகழ்வில் பிரதான அதிதிகளாக கலந்துகொண்டனர்.

தமது நிறுவனம் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக வெற்றிகரமாகப் பயணிப்பதற்கு தமது நிறுவன ஊழியர்கள் தவறாது பங்களிப்பை வழங்கியதாக மொனிக் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி மதுவந்த வாசல ஆரியபால தெரிவித்தார். இதன்போது விற்பனை இலக்கை வெற்றிகரமாக எட்டிய அதிகாரிகளுக்கு வாகனங்கள் உட்பட பெறுமதியான பல்வேறு பரிசுகள் வழங்கப்படன.

மொனிக் குழுமமானது, வீட்டுக் கடன், கட்டுமான நிதி, தங்கக் கடன், வாகனக் கடன், வணிகக் கடன் மற்றும் நுண்கடன் உட்பட அனைத்து நிலைகளிலும் உள்ள மக்களின் அபிலாஷைகள் மற்றும் கனவுகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீது ஐ.சி.சி. அதிருப்தி



ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான மைதானங்கள் சரியான முறையில் இன்னும் தயாராகவில்லை என்பதால் ஐ.சி.சி. அதிகாரிகள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீது அதிருப்தியில் உள்ளதாக கூறப்படுகிறது.

பெப்ரவரி 19ஆம் திகதி ஆரம்பமாகும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் மைதானங்களை பராமரிக்கும் பணி கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்தது. இந்நிலையில், தொடர் ஆரம்பமாக இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில் மைதானங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கராச்சி, லாகூர், ராவல்பிண்டி ஆகிய மைதானங்கள் விளையாடுவதற்கு தகுதி வாய்ந்ததாக இன்னும் ஆக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்தப் பணிகள் திட்டமிட்டபடி நடந்திருந்தால் கடந்த டிசம்பர் 31ஆம் திகதி முடிந்திருக்க வேண்டும். ஆனால் இன்னமும் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த மைதானங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பெப்ரவரி 12ஆம் திகதிக்குள் சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் இப்போதைய சூழலில் பணிகள் பெப்ரவரி 12ஆம் திகதிக்குள் நிறைவேற்றி விடுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ரி20 உலகக்கிண்ணத் தொடர் கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடத்தப்பட்டது. அப்போது அமெரிக்க மைதானங்கள் படுமோசமாக இருந்ததால் ஐ.சி.சி. மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. அந்த மோசமான அனுபவத்தை ஐ.சி.சி. மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

# இரு ஆண்டுகளின் பின் முதல்தர கிரிக்கெட்டில் ஆடுவாரா கோஹ்லி?



ரஞ்சி கிண்ண முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் டெல்லி அணிக்காக ரிஷப் பண்ட் ஆடப்போவது உறுதியான நிலையில், டெஸ்ட் கிரிக்கெட்டில் கடுமையாக சொதப்பினாலும் ஓய்வு அறிவிக்க மனம் வராத விராட் கோஹ்லி தன் ஃபார்மை மேம்படுத்திக் கொள்ள டெல்லி அணிக்காக ஆடுவார் என்று உத்தேச அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால், கோஹ்லி இன்னமும் ஆடுவாரா மாட்டாரா என்ற சந்தேகமே நீடிக்கிறது. அவர் லண்டனுக்குச் சென்று விட்டார். அவர் இனி இங்கு வந்து உள்நாட்டு கிரிக்கெட் ஆடுவதெல்லாம் சாத்தியமில்லை என்றுதான் கிரிக்கெட் வட்டாரங்கள் கூறுகின்றன. விராட் கோஹ்லி கடைசியாக டெல்லி அணிக்காக ரஞ்சி போட்டியில் 2012ஆம் ஆண்டு ஆடியதோடு சரி. உள்நாட்டு கிரிக்கெட்டையே ஏறக்கட்டி விட்டார்.

தற்போது பார்மில் இல்லாத கோஹ்லி, ரோஹித் சர்மா உள்நாட்டு கிரிக்கெட்டில் விளையாட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகின்றன. பி.சி.சி.ஐ. அணித் தெரிவாளர்கள் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் வர்த்தக நோக்கங்களுக்காக ரோஹித், கோஹ்லி இருவரையும் தெரிவு செய்வதால்தான் இது நடக்கிறது.

சுப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால் ரஞ்சி டிராபியில் ஆடவிருக்கின்றனர். ஒன்று விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா ஓய்வு அறிவிக்க வேண்டும் இல்லையெனில் டெஸ்ட் அணியில் நீடிக்க வேண்டும். உள்நாட்டுக் கிரிக்கெட்டில் ஆடுவது மட்டும் போதாது, அங்கு நிரூபிக்க வேண்டும். அப்போதுதான் தெரிவு சாத்தியம் என்ற நடைமுறையை கண்டிப்பாக்கினால்தான் இந்திய கிரிக்கெட் ஸ்டார்களின் அலட்சியப் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

# சேதமடைந்த ஒலிம்பிக் பதக்கங்களை மீளளிக்கும் மனு பாக்கர்



இந்தியாவின் பிரபல துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனையான மனு பாக்கர் தான் பெற்றுள்ள ஒலிம்பிக் பதக்கங்களை திருப்பியளிக்க முடிவெடுத்துள்ளார். சர்வதேச ஒலிம்பிக் குழு, 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று பதக்கம் வென்றவர்களிடமிருந்து பதக்கங்களை திருப்பிப் பெறுவதாக அறிவித்துள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழு வெளியிட்டுள்ள தகவலின்படி, 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் வழங்கப்பட்டுள்ள பதக்கங்கள் ஏதேனும் சேதமடைந்திருப்பின், வீரர்கள் அந்த பதக்கங்களை திருப்பியளித்துவிட்டு மாற்று பதக்கங்களை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஒலிம்பிக் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் மனு பாக்கர் 02 வெண்கலப் பதக்கங்களை வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், மேற்கண்ட பதக்கங்கள் சேதமடைந்திருப்பதாக கூறப்படுகிறது. இதனையடுத்து, மனு பாக்கர் தான் பெற்ற பதக்கங்களை திருப்பியளிக்க உள்ளார். அவரிடமிருந்து பெறப்படும் பதக்கங்களுக்குப் பதிலாக, புதிய பதக்கங்கள் விரைவில் வழங்கப்படும்.

# மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு




(பெரியநீலாவணை செய்தியாளர்)

மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் 2025 - 2026 ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியருமான யூ.எஸ்.சமீம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது நிறைவேற்று சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதன்போது கிரிக்கெட் சங்கத்தின் புதிய தலைவராக மருதம் விளையாட்டு கழகத்தின் பொதுச் செயலாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஏ.மனாஸ் தெரிவானார்.

கிரிக்கெட் சங்கத்தின் செயலாளராக எம்.ஐ. நஜிமுல் றியாஸ் தெரிவானார். பொருளாளராக எம்.எம்.சறூக் தெரிவு செய்யப்பட்டார். இவர்களுடன் சிரேஷ்ட உதவித் தலைவராக ஏ.எம்.எம்.றியாஜத் தெரிவு செய்யப்பட்டதுடன் ஏ.ஆர்.எம். உவைஸ், எம்.ஆர்.மபாஸ் ஆகியோர் உதவித் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். உதவி செயலாளராக எம்.பி.எம்.றாஜித் தெரிவானார்.

இதனையடுத்து, கடந்த 05ஆம் திகதி நடத்தப்பட்ட மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவின் முதலாவது கூட்டத்தில் சுற்றுப் போட்டிக்குழு, ஒழுக்காற்றுக் குழு, மேன்முறையீட்டுக் குழு, தொழில்நுட்பக்குழு, மத்தியஸ்தர் குழு போன்ற குழுக்களுக்கான பிரதிநிதிகளும் நியமனம் செய்யப்பட்டனர்.

# விளையாட்டுத் துளிகள்

ஆஸி. ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லெவ், பிரேஸிலின் ஜோவோ பொன்சேகா உடன் மோதினார். இந்த ஆட்டத்தில் எளிதில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட ரூப்லெவ் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் 6:7 (1:7), 3:6, 6:7 (5:7) என்ற செட் கணக்கில் ஜோவோ பொன்சேகாவிடம் அதிர்ச்சி தோல்வி கண்டு முதல் சுற்றுடன் தொடரிலிருந்து வெளியேறினார்.

••••••••••••••••••••••••••••••••••••••••••••••••

அயர்லாந்து மகளிர் அணியுடனான 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி 435 ரன்கள் குவித்து ஒருநாள் போட்டியில் தங்களது அதிக ரன்கள் குவித்த சாதனையை படைத்தது. மேலும் ஒட்டுமொத்தத்தில் அதிக ரன்கள் குவித்த அணிகள் பட்டியலில் இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது. முதல் 03 இடங்களில் நியூஸிலாந்து அணி உள்ளது.

••••••••••••••••••••••••••••••••••••••••••••••••

ஐ.சி.சியின் புதிய ஒருநாள் பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர் மகேஷ் தீக்ஷன முதல் 03 இடங்களுக்குள் முன்னேறியுள்ளார். நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் தனது சிறப்பான ஆட்டத்தின் மூலம் அவர் 3ஆவது இடத்தை பிடித்து அசத்தியுள்ளார். ஒருநாள் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் ஆப்கானிஸ்தானின் ரஷிட் கான் முதலிடத்தில் நீடிக்கிறார். இந்தியாவின் குல்தீப் யாதவ் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

••••••••••••••••••••••••••••••••••••••••••••••••

அயர்லாந்துடனான ஆட்டத்தில் 70 பந்துகளில் சதம் விளாசிய ஸ்மிருதி மந்தனா அதிகவேக சதம் அடித்த முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார். 87 பந்தில் ஹர்மன்பிரீத் கவுர் சதம் அடித்ததே முன்னர் சாதனையாக இருந்தது. மேலும் ஒருநாள் போட்டியில் அதிக சதம் விளாசியவர்கள் பட்டியலில் மந்தனா 10 சதங்கள் அடித்து 4ஆவது இடத்தில் உள்ளார்.

••••••••••••••••••••••••••••••••••••••••••••••••

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகும் நிலையில் நட்சத்திர வீரர்களான கார்லோஸ் அல்கராஸ், நோவக் ஜோகோவிச், அலெக்சாண்டர் ஸ்வேரெவ் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

# சம்பியன்ஸ் கிண்ண ஆரம்ப விழாவுக்கு பாகிஸ்தான் செல்லும் ரோஹித்



ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில் இத்தொடருக்கான ஆரம்ப விழாவை பெப்ரவரி 16 மற்றும் 17ஆம் திகதிகளில் பாகிஸ்தானில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. இதில் கலந்து கொள்ள ரோஹித் சர்மா பாகிஸ்தான் செல்லவுள்ளார்.

பாகிஸ்தானில் சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் நடைபெறும் நிலையில் இந்திய அணி பங்கேற்கும் போட்டிகள் மாத்திரம் டுபாயில் நடைபெறவுள்ளது. ஐ.சி.சி. நிகழ்வுகளில் வழக்கமான நடைமுறையான ஆரம்ப விழாவில் அனைத்து அணித் தலைவர்களும் பங்கேற்பது வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது.

அந்தவகையில், இந்திய அணியின் போட்டிகள் டுபாயில் நடைபெறும் நிலையில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா இந்நிகழ்வில் பங்கேற்பாரா என்ற கேள்விகள் அதிகரித்துள்ளன. எனினும், ஆரம்ப விழாவில் கலந்துகொள்ள ரோஹித் பாகிஸ்தான் செல்லவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

29 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானில் ஒரு மெகா சர்வதேச கிரிக்கெட் தொடர் மீண்டும் நடைபெறுவதைக் குறிக்கும் வகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பிரமாண்டமான நிகழ்வைத் திட்டமிட்டுள்ளது.

# சம்பியன்ஸ் கிண்ணத்திலிருந்து விலகும் நோர்ட்ஜே



ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியிலிருந்து வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே விலகியுள்ளார்.

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்க அணியை டெம்பா பவுமா வழிநடத்துகிறார். இதில் இந்தியாவில் நடந்த ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்ற 10 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இந்த அணியில் ஐடன் மார்க்ரம், ஹெய்ன்ரிச் கிளாசென் மற்றும் டேவிட் மில்லர் போன்ற குறிப்பிடத்தக்க பெயர்கள் இடம்பெற்றிருந்தன. டோனியர் டி சோர்சி மற்றும் ரியான் ரிக்கெல்டன் போன்ற புதுமுகங்கள் இடம்பெற்றிருந்தனர். இந்த வீரர்கள் தென்னாரிக்காவின் அணியில் புதிய உத்வேகத்தை ஏற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே விலகியுள்ளார்.

முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் தொடரிலிருந்து விலகியுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது இந்த விலகல் தென்னாபிரிக்க அணிக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

## நிலைமை தொடருமாயின் காலவரையறையின்றி பல்கலை மூடப்படுமென்கிறார் உபவேந்தர்

*பேராதனை நிருபர்*

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மோதல் தொடருமாயின் அதனைத் தவிர்ப்பதற்காக பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்படுமெனவும் பல்கலைக்கழக உபவேந்தர் அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை கட்டுப்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழக உபவேந்தரால் மாணவர் சங்கங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையுமே இப்பதற்ற நிலைமைக்கு காரணமாகும்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் (15) இரவு முகாமைத்துவபீட மாணவர்கள் உலக பல்கலைக்கழக மாணவர் மையத்தில் நடத்திய பிரியாவிடை நிகழ்வின் போது நடைபெற்ற நடன நிகழ்வில் அங்கு வந்த பொறியியல் பீட மாணவர்களும் நடனமாடத் தொடங்கியுள்ளனர். இதன்போது முகாமைத்துவப் பீட மாணவிகளுடன் பொறியியல் பீட மாணவர்கள் சிலர் நடனமாடியதன் காரணமாக முகாமைத்துவப் பீட மாணவர்கள் பொறியியல் பீட மாணவர்களை அவ்விடத்தைவிட்டுச் செல்லுமாறு கூறியுள்ளனர். இதனால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. இதன்போது மாணவர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து இதற்கு முன் கடந்த வருடம் கால்நடை வைத்திய பீட மாணவர்களது ஒன்று கூடலின் போதும் பொறியியல் பீட மாணவர்களுடன் இவ்வாறான ஒரு நடனச் சம்பவத்தின் காரணமாக கைகலப்பு ஏற்பட்டிருந்தது. இதில் கால்நடை வைத்திய பீட மாணவர்கள் தாக்கப்பட்டுமிருந்தனர். இவற்றின் காரணமாக பொறியியல் பீட மாணவர்களுக்கெதிராக ஏனைய எட்டு பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஒன்றிணைந்து தாக்குவதற்கு முனைந்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் இந்த எட்டு பீடங்களையும் சேர்ந்தவர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் தமது மாணவர் சங்கக் கூட்டங்களை நடத்தி பொறியியல் பீட மாணவர்களைத் தாக்குவதற்கான தீர்மானங்களை எடுத்துள்ளனர். இதேபோல் இதனை எதிர்ப்பதற்கு பொறியியல் பீட மாணவர்கள் சங்கம் தமது கூட்டத்தை நடத்தியுள்ளனர். இச்சம்பவங்கள் ஒழுக்காற்றுக் குழு மூலம் உபவேந்தருக்கு அறிவிக்கப்பட்டதன் பின் உடனடியாக சகல பீட மாணவ சங்கங்களுக்கும் ஒன்றுகூடுவதற்கும் கூட்டங்களை நடத்துவதற்கும் கூட்டங்களில் உரையாற்றுவதற்கும் தடைவிதிக்கப்பட்டது. மாணவர்களுக்கிடையே மோதல் ஏற்படுமானால் உடனடியாக காலவரையறையின்றி பல்கலைக்கழகம் மூடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று உபவேந்தர் காரியாலயத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக அனைத்து மாணவர் சங்கப் பிரதிநிதிகளுடனான கூட்டத்திலேயே உபவேந்தர் இவ்வாறு அறிவித்துள்ளார். இதன் காரணமாக பல்கலைக்கழகத்தில் பதற்றம் நிலவியது.

மாணவர் சங்கங்களைத் தடை செய்தமை தொடர்பாக சில பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளதோடு எதிராக குரலெழுப்பியும் வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவி கடத்தல்: சந்தேகநபருக்கு விளக்கமறியல்

தவுலகல பிரதேசத்தில் பாடசாலை மாணவியொருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கம்பளை, தவுலகல பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (11) பாடசாலை மாணவியொருவர் சக மாணவருடன் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த போது வலுக்கட்டாயமாக வேனில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்,பிரதான சந்தேக நபர் அம்பாறை நகரத்தில் வைத்து கடந்த 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்தார்.

பின்னர், கடத்திச் செல்லப்பட்ட மாணவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

மாணவியை கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட வேன் கைப்பற்றப்பட்டதுடன் வேனின் சாரதி கடந்த 14 ஆம் திகதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், பிரதான சந்தேக நபரின் நண்பனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது மூவரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# காதி நீதிபதிகளுக்கான வெற்றிடத்தால் மத்திய மாகாணத்தில் நிலுவையில் வழக்குகள்

## புதியவர்களை நியமிக்குமாறு மனுதாரர்கள் வேண்டுகோள்

*எம்.எஸ்.எம். மஸாஹிம்*

மத்திய மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள காதி நீதி மன்ற நீதிபதிகளை நியமிக்க அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மனுதாரர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மாத்தளை, கண்டி, நாவலப்பிட்டி, கெலிஓயா, உடதலவின்ன மற்றும் அக்குறணை போன்ற பகுதிகளிலேயே நீண்ட காலமாக காதி நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்படாதிருப்பதாக மனுதாரர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பல நூற்றுக்கணக்கான விவாகரத்து மற்றும் தாபரிப்பு வழக்குகள் நிலுவையில் தேங்கிக் கிடப்பதாகவும் மனுதாரர்கள் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியாத இக்கட்டான சூழ்நிலைக்கு முகங்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதிகளில் காதி நீதிவான்களாகப் பணியாற்றியவர்கள் தங்களின் சேவைக்காலம் முற்றுப்பெற்று சேவையிலிருந்து விலகிக்கொண்டதன் காரணமாக அல்லது வயது மூப்பு காரணமாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் வெற்றிடமாகக் காணப்படும் குறித்த பகுதிகளுக்கு புதிதாக எவரும் நியமிக்கப்படாததால் தாங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் மனுதாரர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தகுதியான மற்றும் பொருத்தமானவர்களை காதி நீதிபதிகளாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பதுளை- பசறை வீதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்தது

## ஒருவர் படுகாயம்

*ராமு தனராஜா*

பதுளை - பசறை வீதியில் மண்மேடு சரிந்து விழுந்ததில் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்துள்ளதாகப் பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் கோணக்கலை, பசறைப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் என பசறைப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றுள்ளது.

பசறைப் பகுதியிலிருந்து கோணக்கலை பசறை டிவிஷன் பகுதிக்கு குறித்த நபர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பசறை பால் சபைக்கருகாமையில் மண்மேட்டுடன் வெட்டி வைக்கப்பட்டிருந்த மரமொன்றின் அடிக்கட்டையும் மண்ணும் சரிந்து சைக்கிளின் மீது விழுந்தமையினாலேயே குறித்த நபர் பலத்த காயமடைந்து பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

பதுளை - பசறை வீதியில் விழுந்துள்ள மண்மேட்டை அகற்றும் பணிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மஹியங்கனையில் விபத்து: சார்ஜன்ட் உயிரிழப்பு

*ராமு தனராஜா*

மஹியங்கனை, லொக்கல்ல ஓயா பகுதியில் நேற்று முன்தினம் (15) பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் அராவ பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தகெட்டிய பகுதியைச் சேர்ந்த அராவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 57 வயதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மூன்று நாள் விடுமுறையில் தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது லொக்கல்ல ஓயா பயோமாஸ் மின் உற்பத்தி நிலையத்துக்கு அருகிலுள்ள கோவிலுக்கு முன்னால் அவரது மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியது.

குறித்த நபர் மஹியங்கனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினமிரவு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அராவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





**ப்ரொடெக் சங்கத்தின் ஏற்பாட்டில் ஹட்டன், டிக்கோயா, அளுத்கம பகுதியில் பொங்கல் விழா இடம்பெற்றது. இதன்போது ப்ரொடெக்ட் சங்க நிர்வாகத்தினர், தோட்டப் பகுதி மக்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (நீலமேகம் பிரசாந்த்)**

# சீரற்ற காலநிலை தொடர்பாக அவசர கலந்துரையாடல் இணையவழியில்

*பு.கஜிந்தன்*



வடக்கு மாகாணத்தில் நெல்லை அறுவடை செய்யக்கூடிய விவசாயிகள் காலநிலை எதிர்வுகூறலைக் கருத்திலெடுத்து அறுவடையில் ஈடுபடவேண்டுமென வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாகத் தொடரும் சீரற்ற காலநிலை தொடர்பாக அவசர கலந்துரையாடல் இணையவழியில் நேற்று முன்தினம் புதன்கிழமை (15) இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திலிருந்து ஆளுநர் மற்றும் பிரதம செயலர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்துகொண்டனர்.

விவசாயிகள் நெல் அறுவடைக் காலத்தில் திடீரென ஏற்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்கள் வான்பாய்வதாக மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்துக்கான நீர்வரத்து அதிகமாக உள்ளபோதும் குறைந்தளவான நீரே திறந்துவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் சுட்டிக்காட்டினார். இதேவேளை, மாவட்டத்தின் சில பகுதிகளில் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்திலும் சில வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன எனவும் கலந்துரையாடலின்போது மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் இரண்டு உடைப்பெடுத்துள்ளதாக இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளங்களில் 47 குளங்கள் தற்போது வான்பாய்ந்துகொண்டிருப்பதாக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார்.

தற்போதைய நிலையில் மழைவீழ்ச்சி குறைந்து வருவதாகவும் குளங்களுக்கான நீர்வரத்து குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன், அதற்கமைவாக இன்று மாலையிலிருந்து படிப்படியாக வான்கதவுகள் மூடப்படுமென்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாக நெல்லை அறுவடை செய்யக்கூடிய விவசாயிகள் அதனை அறுவடை செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துவதனூடாக அழிவுகளைக் குறைக்கமுடியுமென ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் அதிகாரிகளும் இணையவழியில் கலந்துகொண்டனர்.

# யாழ். தொழிலற்ற பட்டதாரிகள் வித்தியாசமான முறையில் போராட்டம்!






*பு.கஜிந்தன்*

யாழ். தொழிலற்ற பட்டதாரிகளின் பிரச்சினையையும் கோரிக்கையையும் மக்கள்மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்று நேற்றுக் (16) காலை 9.30 மணியளவில் யாழ். நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துகளை உள்வாங்கல் போன்ற நிகழ்வுகள் தொழிலில்லாப் பட்டதாரிகளின் கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபி முன்றிலில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. அதனைத்தொடர்ந்து யாழ். நகர்ப்பகுதிக்குள் பேரணி இடம்பெற்றதுடன், பட்டம் பெற்றுவிட்டு தாங்களும் சாதாரண வேலைகளைத்தான் செய்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வீதியைக் கூட்டுதல், குப்பை வண்டியை தள்ளுதல் போன்ற விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

தமது பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் மக்கள் மயப்படுத்தி தமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள வலுச்சேர்க்கும் நோக்குடன் இச்செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

# மருதங்கேணிக்கு கொண்டுவரப்பட்ட புத்தர் சிலைகள்!



*பு.கஜிந்தன்*

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் நேற்று முன்தினம் (15) கரையொதுங்கிய மர்ம நினைவாலயச் சின்னத்திலிருந்த 18 புத்தர் சிலைகளை பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசென்றனர்.

அண்மைக்காலமாக காலநிலை மாற்றங்களால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல், நிலநடுக்கம் போன்றவை பல தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டன. இதன்போது மியன்மாரிலிருந்து இந்த நினைவாலயம் வந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

குறித்த நனைவாலயத்தில் பௌத்த சமயத்தைத் தாங்கிய பல மரபு அம்சங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற மருதங்கேணி பொலிஸார் அதில் காணப்பட்ட 18 புத்தர் சிலைகளையும் செப்பேடுகளையும் மீட்டுள்ளனர்.மீட்கப்பட்ட சிலைகள் உட்பட்ட பொருட்கள் தற்பொழுது மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# வடமராட்சியில் இருவரிடம் தொலைபேசியூடாக பணம் கொள்ளை!

*பு.கஜிந்தன்*

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் கடந்த 07 ஆம் திகதி அன்று இரண்டு இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

தனியார் தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்தின் சீட்டிழுப்பு மூலம் பணப்பரிசு கிடைத்திருப்பதாகக் கூறி அவரின் வங்கிக் கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வங்கிக் கணக்கிலுள்ள தொலைபேசி இலக்கம் என்பவற்றைப் பெற்று கடவுச்சொற்களையும் அவரின் அறியாமையைப் பயன்படுத்தி பெற்று அதன்மூலம் இலங்கை வங்கிக் கணக்கின் Smart pay செயலியில் உள்நுழைந்து ரூபா 2,00,000 பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

இவ்வாறே தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வேம்படியைச் சேர்ந்த முதியவர் ஒருவரிடமும் கடந்த திங்கட்கிழமை (13) ரூபா 29 இலட்சத்து 22 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இருவரும் வங்கியில் முறையிட்டபோதும், மக்கள் வங்கியின் கணக்கொன்றுக்கு பணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த வங்கிக் கணக்கின் விபரம் தமது செயலியில் காட்டப்படவில்லையென்றும் கூறியுள்ளனர்.

குறித்த பெண் மருதங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முதியவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# மின்சாரம் சிறிது நேரமே தடைப்பட்டது: தடுப்பு மருந்துகளுக்கு எந்தப் பாதிப்புமில்லை

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

*சிவகுமார் திவியா*

மின்சாரம் சிறிது நேரமே தடைப்பட்டது. இதனால் தடுப்பூசி மருந்துகளுக்கு எந்தப் பாதிப்புமில்லையென வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி நேற்று (16) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் அங்கு வைக்கப்பட்டிருந்த தடுப்பூசி மருந்துகள் பாதிக்கப்படுமா என்கின்ற கேள்வி எழுப்பப்பட்டு ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்ததுடன், மின்சார நிலுவை செலுத்தப்படாமையால் மின் துண்டிக்கப்பட்டதாகவும் நீண்டநேரமாக மின்சாரம் இணைக்கப்படாதுவிடின் அங்கு குளிரூட்டியில் வைக்கப்பட வேண்டிய தடுப்பூசி மருந்துகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்கின்ற சந்தேகமும் நிலவியது.

இந்நிலையில், சிறிது நேரமே மின்சாரம் தடைப்பட்டமையால் குறித்த தடுப்பூசி மருந்துகளைப் பாதுகாக்கக்கூடிய வசதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ளமையால் தடுப்பூசி மருந்துகளுக்கு எந்தப் பாதிப்புமில்லை.

சுமார் இரண்டு மணி நேரம் மாத்திரமே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. எம்மிடமுள்ள குளிரூட்டிகள் 24 மணித்தியாலம் மின்சாரம் தடைப்பட்டாலும் கூட பாதுகாக்கக்கூடிய வசதி கொண்டவையாகக் காணப்படுகின்றன. எனவே, இங்குள்ள தடுப்பூசி மருந்துகள் எந்த விதத்திலும் பழுதடைவதற்கு வாய்ப்பில்லை. எனவே பொதுமக்கள் எவ்வித ஐயமுமின்றி குறித்த தடுப்பூசி மருந்துகளைப் பயன்படுத்தலாமெனவும் தெரிவித்தார்.

# 'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தின் இரத்ததான முகாம்

*பு.கஜிந்தன்*

"விதையனைத்தும் விருட்சமே" செயற்றிட்டமூடாக அண்மையில் மீள திறக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலையின் இரத்த வங்கியை சிறந்த முறையில் செயற்பட வழிவகுப்பதற்கு மாபெரும் இரத்ததான முகாமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'விதையனைத்தும் விருட்சமே' செயற்றிட்டத்தின் இந்த 42ஆவது இரத்த தான முகாமை எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இரத்ததானம் செய்வதற்கு ஆர்வமுள்ள கொடையாளர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0773241755 அல்லது 0772988917 என்ற இலக்கங்களைத் தொடர்புகொள்ள முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



## இஸ்ரேல் - ஹமாஸ் ஒப்புதல்:

# முடிவுக்கு வந்தது காஸா போர்

## 19இல் அமுலுக்கு வருகிறது:

## ட்ரம்ப் - பைடனுக்கு நெதன்யாஹூ நன்றி!

காஸாவில் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 15 மாத காலமாக நீடித்து வந்த போர் முடிவுக்கு வரவுள்ளது. போர்நிறுத்தம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) முதல் அமுலுக்கு வரவுள்ள நிலையில், இதற்காக நடவடிக்கை எடுத்த அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் மற்றும் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனுக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹூ நன்றி தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பலஸ்தீனியர்களும் இஸ்ரேலிய பணயக்கைதிகளின் குடும்பங்களும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

**போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கிடையே காஸாமீது தாக்குதல்**

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர் முடிவுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று (16) 24 மணிநேரத்துக்குள் காஸாமீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 20 சிறுவர்கள் மற்றும் 25 பெண்கள் உட்பட 81 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 188இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

**19இல் அமுலுக்கு வரும் போர் நிறுத்த ஒப்பந்தம்**

இதேவேளை, போர் நிறுத்தத்துக்கான மத்தியஸ்தப் பணியில் அமெரிக்கா மற்றும் கட்டார் உள்ளிட்ட நாடுகள் ஈடுபட்டன. காஸா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் விடுதலை ஒப்பந்தத்தை இஸ்ரேலும் ஹமாஸும் ஒப்புக் கொண்டதாக இவ்விரு நாடுகளும் தெரிவித்துள்ளன. இந்த ஒப்பந்தத்துக்கு இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதலளித்த பின்னர் அது எதிர்வரும் 19ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) அமுலுக்கு வரும் என்று கட்டார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல் தானி தெரிவித்துள்ளார்.



இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், “இந்த ஒப்பந்தம் காஸாவில் போரை நிறுத்தும். பலஸ்தீன பொதுமக்களுக்கு மிகவும் தேவையான மனிதாபிமான உதவியை அதிகரிக்கும். பணயக்கைதிகளை அவர்களது குடும்பங்களுடன் மீண்டும் இணைக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

**பைடனுக்கு நன்றி - நெதன்யாஹூ**

இந்த ஒப்பந்தம் குறித்துப் பேசிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ, “ஒப்பந்தத்தின் இறுதி விவரங்கள் இன்னும் ஆராயப்பட்டு வருகின்றன. எனினும், இதை ஊக்குவித்ததற்காக பைடனுக்கு நன்றி” எனத் தெரிவித்துள்ளார்.

**நிலையான அமைதிக்கு 16 நாளில் மீண்டும் பேச்சு**

போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததும் முதல் ஆறு வாரம் இரு தரப்பினரும் ‘அமைதியாக’ இருக்க வேண்டும் என்று கட்டார் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர்,

“இந்த காலகட்டத்தில், இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீன கைதிகளுக்கு பதிலாக, ஹமாஸ் பிடியிலுள்ள பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் 33 பேர் விடுவிக்கப்படுவார்கள். காஸாவின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேலிய படைகள் கிழக்கு நோக்கி பின்வாங்கும். இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும், நூற்றுக்கணக்கான லொறிகள் மூலம் உதவிப்பொருட்கள் ஒவ்வொரு நாளும் காஸாவுக்குள் செல்ல இஸ்ரேல் அனுமதிக்கும். மீதமுள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்படுவது, இஸ்ரேலிய துருப்புக்கள் முழுமையாக திரும்பப் பெறுவது, ‘நிலையான அமைதிக்கு’ திரும்புவது போன்றவற்றுக்கான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் வரும் 16ஆவது நாளில் தொடங்கும்” என தெரிவித்துள்ளார்.

**போரின் பின்னணி**

காஸாவை தளமாகக் கொண்டியங்கிவரும் ஹமாஸ் போராளிகள் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி, திடீரென இஸ்ரேலுக்குள் புகுந்து நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 251 பேர் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை தொடங்கியது. ஹமாஸ் போராளிகளை அழித்தொழிக்கும் வரை போர் தொடருமென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ சூளுரைத்தார். இதனையடுத்து காஸாவுக்கான உணவு, குடிநீர், மின்சாரம் மற்றும் இணையம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை துண்டித்தது இஸ்ரேல். அத்துடன் காஸாமீது தரை, வான் மற்றும் கடல் மார்க்கமாகவும் தாக்குதலை தொடங்கியது இஸ்ரேல். இப்போர் கடந்த 15 மாதங்களாக தொடர்ந்த நிலையில் காஸாமீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 46,788 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1,10,453இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

அத்தோடு காஸா வாழ் 23 இலட்சம் மக்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்துள்ளனர். காஸாவில் பரவலான அழிவு ஏற்பட்டுள்ளது. உணவு, எரிபொருள், மருந்து மற்றும் தங்குமிடம் ஆகியவற்றின் கடுமையான பற்றாக்குறை காரணமாக மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

இப்போர் 15 மாதங்களை கடந்தும் நீடித்து வந்தநிலையில் தற்போது போர் நிறுத்தத்துக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது.

## முடிவுக்கு வருகிறது 50ஆண்டு கால அரசியல் வாழ்க்கை

# வெள்ளைமாளிகையிலிருந்து வெளியேறுகிறார் பைடன்

## “அமெரிக்காவை ஆட்சி செய்யப்போகும் சுயநலக்குழு”; இறுதி உரையில் நாட்டு மக்களை எச்சரித்த ஜனாதிபதி

“அமெரிக்காவின் ஆட்சி அதிகாரம் மிகப் பெரிய செல்வந்தர்களின் கைகளில் செல்வதால் நாட்டு மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்’’ என ஜனாதிபதி ஜோ பைடன், தனது பிரியாவிடை உரையில் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். இதனையடுத்து, அவர் எதிர்வரும் 20ஆம் திகதி அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார். அன்றைய தினமே அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறவும் உள்ளார். இந்நிலையில் ஜனாதிபதி ஜோ பைடன், வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் (15) நாட்டுமக்களுக்கு அதிகாரபூர்வ இறுதி உரையை நிகழ்த்தினார். அப்போது அவர்,

“இன்று அமெரிக்காவில் ஓர் அதீத செல்வம், அதிகாரம் மற்றும் செல்வாக்கு கொண்ட ஒரு சுயநலக்குழு உருவாகி வருகிறது. இது எமது முழு ஜனநாயகத்தையும் எமது அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனைவரும் முன்னேறுவதற்கான நியாயமான வாய்ப்பையும் அச்சுறுத்துகிறது. ஒரு சில அதி செல்வந்தர்களின் கைகளில் அதிகாரம் ஆபத்தான முறையில் குவிகிறது. அவர்களின் அதிகார துஷ்பிரயோகம்



கட்டுப்படுத்தப்படாவிட்டால் ஆபத்தான விளைவுகள் ஏற்பட்டுவிடும்.

1961ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய டுவைட் ஐசன்ஹோவர், இராணுவ தொழில்துறை சக்திகளின் கூட்டு குறித்து எச்சரித்தார். அதை நினைவுகூர விரும்புகிறேன். அதேபோன்ற ஓர் அச்சுறுத்தல், தொழில்நுட்பம்-தொழில்துறை சக்திகளின் கூட்டு ஏற்படுத்துவதைக் கண்டு நான் கவலைப்படுகிறேன். விரைவான தொழில்நுட்பம் ஏற்படுத்தும் பொருளாதார மாற்றத்தின் கொந்தளிப்பான 10 ஆண்டுகளை நாம் கடந்துள்ளோம். இவ்விடயத்தில், அமெரிக்கர்கள் தங்கள் சுதந்திரம் குறித்தும் தங்களின் நிறுவனங்கள் குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**மத்திய கிழக்கில் முடிவுக்கு வந்தது இரத்தக்களரி**

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளது. இது மத்திய கிழக்கில் ஒரு வருடத்துக்கும் மேலாக நடந்த இரத்தக்களரியை முடிவுக்குக் கொண்டுவரக்கூடும். அமெரிக்காவின் நலனுக்காக எங்கள் குழு செய்தவற்றின் முழு தாக்கத்தையும் உணர நேரம் எடுக்கும். ஆனால், விதைகள் நடப்பட்டுள்ளன. அவை வளரும். அவை வரவிருக்கும் பல பத்தாண்டுகளுக்கு பூத்துக்குலுங்கும்.

புதிய ஆட்சியாளர்களுக்கு அளிக்க வேண்டிய பல்வேறு விளக்கங்கள் முறைப்படி வழங்கப்படும். மத்திய கிழக்கு பேச்சுவார்த்தைகள் குறித்து வரவிருக்கும் நிர்வாகத்தை ஒருங்கிணைப்பது உட்பட அமைதியான அதிகார மாற்றம் உறுதி செய்யப்படும்” எனத் தெரிவித்தார்.

அதிபர் ஜோ பைடனின் அதிபர் பதவி மட்டமல்ல, அவரது 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையும் தற்போது முடிவடையவுள்ளது. 1972ஆம் ஆண்டு ஜோ பைடன் தனது 30ஆவது வயதில், தனது சொந்த மாநிலமான டெலாவேரில் செனட்டராக தெரிவுசெய்யப்பட்டார். ஜோ பைடனின் இந்த உரையை, அவரது குடும்பத்தைச் சேர்ந்த முதல் பெண்மணி ஜில் பைடன், மகன் ஹண்டர், பேரக்குழந்தைகள், கமலா ஹரிஸ், அவரது கணவர் டக் எம்ஹாஃப் உள்ளிட்டோர் கேட்டனர்.



## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு; மாடுபிடி வீரர்கள் 23 பேர் காயம்!

## தி.மு.கவின் அடுத்த தலைமுறை உதயமாக கவனம் பெற்ற இன்பநிதி



உலகளவில் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுகளில் ஒன்று அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு. அவனியாபுரம், பாலமேட்டை தொடர்ந்து நேற்று (16) அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகளை தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி தொடங்கி வைத்தார்.

இப்போட்டியில் 1,000 காளைகளுடன் 900 மாடுபிடி வீரர்கள் போட்டியில் களமிறங்கினர். வாடிவாசலில் இருந்து பாய்ந்துவரும் காளைகளை, வீரர்கள் உற்சாகத்துடன் அடக்கினர். இப்போட்டியில் காளைகள் குத்திக்கிளித்ததில் மாடுபிடிவீரர்கள் 23 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜல்லிக்கட்டைப் பார்க்க, துணை முதலமைச்சர் உதயநிதியுடன் அவரது மகன் இன்பநிதியும் வந்திருந்து போட்டியைக் கண்டு ரசித்தார். தி.மு.க. நிர்வாகிகள் மட்டுமில்லாது அரசு அதிகாரிகளும் இன்பநிதியிடம் பவ்யம் காட்டியது, சிறந்த காளை, மாடுபிடி வீரர்களுக்கு அவரை வைத்து பரிசு கொடுக்க வைத்தது ஜல்லிக்கட்டு களத்தை தாண்டி, அரசியல் வட்டாரத்தில் ‘கவனம்’ பெற்றுள்ளது.

விழா மேடையில் உதயநிதி, இன்பநிதி ஒன்றாக சேர்ந்திருந்த புகைப்படங்களை சமூக வலைதளங்களில் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் பதிவிட்டு ‘தி.மு.கவில் அடுத்த தலைமுறை உதயம்’ என பதிவிட்டு வருகின்றனர்.

# விண்வெளியில் சரித்திரம் படைத்தது இந்தியா

விண்வெளியில் இரண்டு செயற்கை கோள்களை இணைக்கும் ‘டோக்கிங்’ செயல்முறை வெற்றி பெற்றுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது. இதன்மூலம், செயற்கைக் கோள்களை விண்வெளியில் இணைத்த 4ஆவது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

சர்வதேச விண்வெளி மையத்தைப் போல, எதிர்வரும் 2035ஆம் ஆண்டுக்குள் தனி விண்வெளி மையத்தை அமைக்க இந்தியா முயற்சித்து வருகிறது. மேலும், ககன்யான் திட்டத்தின்மூலம் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் திட்டப் பணிகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

இத்தகைய பணிகளுக்கு, விண்வெளியில் இரு விண்கலன்களை இணையச் செய்யும் டோக்கிங் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம். இதற்கான முன்னோட்டமாக, பி.எஸ்.எல்.வி., சி 60 ரொக்கெட் மூலம் அனுப்பிய இரு செயற்கை கோள்களை விண்வெளியில் இணைக்கும் முயற்சியில் இஸ்ரோ ஈடுபட்டிருந்தது.



தலா 220 கிலோ எடை கொண்ட சேஸர், டோர்கெட் ஆகிய இந்த ஸ்பேடெக்ஸ் விண்கலன்கள் நேற்று (16) விண்வெளியில் இரண்டு செயற்கைக்கோள்களை இணைக்கும் டோக்கிங் செயல்முறை வெற்றி பெற்றுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், விண்கலன்களை இணையச்செய்யும் வரலாற்று நிகழ்வு வெற்றி பெற்றுள்ளது. விண்வெளியில் டோக்கிங் செய்த 4ஆவது நாடு இந்தியா எனக் குறிப்பிட்டுள்ளது. ரஷ்யா, அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து, செயற்கைக்கோள்களை விண்வெளியில் இணையச்செய்த 4ஆவது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

சரித்திர சாதனை படைத்த இந்திய விஞ்ஞானிகளுக்கு இஸ்ரோ புதிய தலைவர் நாராயணன் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7